

சித்திர ராமாயணம்


பி. ஸ்ரீ.

171. அழியா அழகு

ராமன் முன்னே செல்லச் சீதை பின்னே தொடர்ந்து வருகிறாள். கடைசியாக வருகிறான் இளையவன். 'பொய்யோ எனும் இடையாள்' — வேறு பொய்தான் நெருக்க முடியாதே! — ராமனது நிழல் போலச் செல்லுகிறாள். ராமன் அவளைத் தன் நிழலிலே அழைத்துப் போகிறான், — சூரிய கிரணங்கள் தன்மேல் படும்படியாக. சீதையோடும் இளையவனோடும் செல்லும் ராமனது நிற அழகும் மேனியின் எழிலும் பெருமிதப் பொலிவும் கம்பன் காட்ட, நம் உள்ளத்திலும் பிரதிபலிக்கின்றன.

ஒலிச் சித்திரம்

'பால சூரியனது பொன்னிறக் கதிர்களில் ஒளி வீசும் அஞ்சனமோ?' என்று முதன் முதல் கருதுகிறோம். பிறகு, 'இளஞ் சூரியனது பொற் கதிர்களிலே பிரதிபலிக்கும் மரகதப் பச்சையோ?' என்று ஐயப்படுகிறோம். இப்போது அந்த அழகு, அலைகள் மடங்கிவிழும் கடல் போல அவ்வளவு கம்பீரமாகத் தோன்றுகிறது. 'இளஞ் சூரியனது பொன்னிறக் கதிர்கள் கொஞ்சி விளையாடும் நீலப் பெருங் கடலோ?' என்று அதிசயிக்கிறோம்: இத்தனை உவமைகளிலும் திருப்தியடையாத உள்ளம். மழை மேகத்தினிடையே தோன்றும் வான வில்லின் வசீகர அழகையும் ராமனது மேனியில் கண்டு களிக்கின்றது.




மையோ? மர
கதமோ? மறி
கடலோ? மழை
முகிலோ?

என்றெல்லாம் பிரமிக்கும் உள்ளம், திகைத்துத் தன்னை மறந்து 'ஐயோ!' என்று கதறுகிறது.

கடைசியாகக் கவிஞன், 'அழியா அழகே இவன் வடிவம்!' என்று சித்தாந்தம் செய்து விடுகிறான். இந்த அழகிற்கு இப்பாட்டு ஓர் அழியா அழகு - வடிவம் அளித்து விடுகிறது.

இப்பாட்டைப் பாடிப் பாடிப் பாருங்கள். கவலையை மறந்து ராமன் சீதையுடனும் இளையோனுடனும் உல்லாசமாக உலாவிச் செல்லும் நடையை அப்படியே நம் மனக்கண்முன் காண்கிறோம். பாட்டின் ஓசையின்பம், அந்த ஆனந்தமான காலை இளங் காற்றையும், அக்



காற்றை அனுபவித்துக் கொண்டு எதோ ஓர் ஆனந்தக் கடலில் மிதந்து செல்வதுபோலச் செல்லும் அழகனையும் அழகியையும் இளையவனோடு எவ்வளவு அழகாக ஞாபகப் படுத்துகிறது !

நடை யழகு

இப்படி இவர்கள் செல்லும்போது ஒரு பக்கத்திலே ஆண் அன்னமும் பெண் அன்னமும் உலாவிக் கொண்டிருக்கின்றனவாம். லட்சுமணன் கொஞ்சம் பின் தங்கி வருகிறான். சீதையும் தானும் உடன் செல்வதுபோல, அந்த அன்னங்கள் உலாவுவதை ராமன் கண்டு களிக்கிறான் :

அளியன்னதொர் அறல்துன்னிய
குழலாள்,கடல் அமிழ்தின்
தெளிவன்னதொர் மொழியாள்,நிறை
தவம்அன்னதொர் செயலாள்,
வெளியன்னதொர் இடையாளொடும்,
விடையன்னதொர் நடையான்,
களியன்னமும் மடஅன்னமும்
உடனாடுவ கண்டான்.

[அளி - வண்டு. அன்னது - ஒத்தது. ஓர் - ஒப்பற்ற. அறல் — கருமணல். துன்னிய — நெருங்கியது போல நெருங்கி யிருக்கும். குழலாள் — கூந்தலையுடையவள். கடல் அமிழ்தின் - கடலிலே தோன்றிய அமிர்தத்தின். தெளிவு அன்னது-தெளிவை ஒத்தது. ஓர் மொழியாள்—ஒப்பற்ற பேச்சை யுடையவள். நிறைதவம் அன்னது ஓர் செயலாள்—நிறைந்த தவத்தை ஒத்த செயலை யுடையவள். வெளி அன்னது ஓர் இடையாள்-வெட்டவெளி போன்ற (கண்ணுக்குப் புலனாகாத) இடையை உடையவள். விடை—காளைமாடு. அன்னது-ஒத்தது. ஓர் நடையான்—ஒப்பற்ற (கம்பீரம் வாய்ந்த, நடையை உடைய) ராமன். களி அன்னம்—களிப்பை உடைய ஆண் அன்னம். மட அன்னம்—பெண் அன்னம். உடன் ஆடுவ-சேர்ந்து உலாவுவதை.]

சீதை போகும்போது காற்றில் அசையும் கூந்தல், வண்டுகளையும் நெருங்கிய கருமணலையும் நினைப்பூட்டுகின்றனவாம். ராமனுடன் என்ன என்னவோ பேசிக்கொண்டு போகிறாள், அவன் சும்மா கேட்டுக் கொண்டே வருகிறான். அவள் சொல்லும் விஷயத்தைக் கூட அவ்வளவு கவனியாமல் அந்தத் தெளிந்த, இனிமை மிகுந்த, வாக்கை அமுதமாய்ப் பருகிக் கொண்டே போகிறான் என்று சொல்ல வேண்டும். ‘தவம் என்பதே இவள் செயல்!’ என்று சொல்லும்படி அவ்வளவு கள்ளங் கவடற்ற சுபாவத்தை வெளிப்படுத்துகிறாளாம், தன் செயல்கள் மூலமாக.

இத்தகைய அழகியுடன் கம்பீரமாக நடந்து செல்லும் ராமன், தங்களைப்போல் உலாவிச் செல்லும் ஆண் அன்னத்தையும் பெண் அன்னத்தையும் குறிப்பாகப் பார்க்க, சீதை தாமரைப் பொய்கையிலுள்ள மலர்களையும் ராமனது ,அடிமலர்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, ‘அம் மலர்களை இம் மலர்கள் பரிகசிக்கின்றன!’ என்று உணர்ந்து கொள்ளுகிறாளாம்.



அக்கம் பக்கத்திலுள்ள பூக்களைக் கொய்து சீதை கூந்தல் நிறையச் சூடிக் கொள்கிறாள்; சூடிக்கொண்டு ராமனோடு உல்லாசமாக நடந்து போகிறாள். அப்படிப் போகும்போது சூடிய பூக்களிலிருந்து நல்ல வாசனையும் மகரந்தப் பொடியும் காற்றிலே பறக்கின்றன.

அக் காட்சியைப் பக்கத்திலே காண்பது போலக் காண்கிறோம் இப் பாட்டிலே :

மாகந்தமும் மகரந்தமும்
அளகம்தர, மதியின்
பாகந்தரு நுதலாளொடு
பவளந்தரும் இதழான்
மேகம்தனி வருகின்றது
மின்னோடென, மிளிர்பூண்
நாகம்தனி வருகின்றது
பிடியோடென நடவா.

[மாகந்தம் — மிக்க நறு மணம்; அடர்ந்த வாசனை. மகரந்தம் — பூவிலுள்ள மகரந்தத் தூள். அளகம் தர — (பூவைச் சூடிய) கூந்தலிலிருந்து பரவி வர. மதியின் பாகம் — பிறைச் சந்திரன். நுதலாள் — நெற்றியையுடையவள். மின் — மின்னல். மிளிர் பூண் — விளங்குகின்ற ஆபரணங்களோடு கூடிய. நாகம் - ஆண் யானை. பிடி - பெண் யானை. நடவா - நடந்து.]

நீலமேகம் ஒன்று மின்னலோடு வருகின்றது போலவும், ஆண் யானையும் பெண் யானையும் துதிக்கைகளை அசைத்தும் பிணைத்தும் நடந்து வருவது போலவும், ராமனும் சீதையும் வருகிறார்களாம் அபூர்வ அழகு வாய்ந்த தோற்றத்துடன்.

வேடிக்கையும் விளையாட்டும்

வழியிலே கரும்பு-ஆலை முதலான காட்சிகள். அந்த விசித்திரங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு நிற்பாள் சீதை. பெரும்பாலும் அரண்மனைக்கு உள்ளே இருந்த அவளுக்கு எல்லாம் விசித்திரம் தான், உத்ஸாகம்தான். ராமனோ எத்தனையோ தடவை இத்தகைய காட்சிகளைக் கண்டிருக்கிறான். எனவே கொஞ்சம் முன்னேறி நடந்து போய்க்கொண்டிருப்பான். பிந்திப் போன சீதை 'ஓஹோ, பிந்தி விட்டோமே!' என்று அப்படியே ஓடிப் போய் ராமனுடைய தோளைப் பற்றி, விளையாடிக் கொண்டே போகிறாள் :

கருப்பேந்திரம் முதலாயின
கண்டாள், இடர் காணாள்,
பொருப்பேந்திய தோளானொடு
விளையாடினள் போனாள்.

[கருப்பேந்திரம் — கரும்பாலை. இடர்காணாள் — வருத்தத்தைக் காணாதவளாய்; உத்ஸாகம் கொண்டவளாய், பொருப்பு ஏந்திய — மலை போன்ற.]

இந்த விதமாக உல்லாஸமாய் நடந்து கங்கைக் கரைக்கு வந்துவிடுகிறார்கள், ராமனும் சீதையும் லட்சுமணனோடு.




சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

172. கங்கையும் ஞான கங்கையும்

வனவாசஞ் செய்யப் புறப்பட்டு ராமன் மனைவியோடும் தம்பியோடும் கங்கையை அடைந்த காலத்தில், அந் நதியின் வட கரையிலுள்ள காட்டிலே முனிவர்கள் நியம நிஷ்டைகளுடன் தவநெறியில் வாழ்ந்து வந்தார்கள். தென் கரையிலுள்ள காட்டிலோ வேடர்கள் வீரவெறியுடன் வேட்டையாடுவதும் போராடுவதும் குடித்துக் களிப்பதுமாய், சுயேச்சை-வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். முனிவர்கள் நாகரிக ஏணியில் உயர்ந்த படியில் இருந்து போக வாழ்க்கையைத் துறந்து வந்தவர்கள். வேடர்களோ நாகரிக ஏணியின் தாழ்ந்த படியில் இருப்பவர்கள். இவர்களைத் தாழ்ந்த வகுப்பினர் அல்லது கீழ்ச் சாதியாராகவே முனிவர்களும் பிறரும் மதித்தனர்.

பழைய உலகின் அறிவுப் பொக்கிஷமான வேத வேதாந்த நூல்களையெல்லாம் முனிவர்கள் நன்றாகக் கற்று உயர்ந்திருந்தனர்; வேடர்களோ 'வில்லின் கல்வி' தவிர வேறு கல்வி யறியாதவர்கள். முனிவர்கள் தங்கள் விசேஷ அறிவின் பயனாகக் குற்றமற்ற சத்திய வாழ்க்கை வாழ்ந்தனர். வேடர்களோ குற்றஞ் செய்யத் தெரியாதவர்கள்; பொய் சொல்லத் தெரியாதவர்கள். முனிவர்கள் தவத்தையே தனமாகவுடையவர்கள் (தபோதனர்); வேடர்கள் வலிமையே தனமாக வுடையவர்கள். கங்கை வேடர்கள் எதிர்க் கரையிலுள்ள முனிவர்களோடு நெருங்கிப்பழகா விட்டாலும், அவர்களைப் பார்த்துப் பார்த்து, ஒருவாறு திருந்திச் சிறிது நாகரிகமடைந்து வந்தார்கள் என்று கருதலாம்.



ராமன் முதலியோர் வளம் நிறைந்த கோசல நாட்டைக் கடந்து கங்கையின் வட கரைக்கு வந்துவிட்டார்கள். வழியிலே எத்தனையோ தாமரைத் தடாகங்கள், சோலைகள், மணல்மேடுகள், நந்தவனங்கள், சில ஆறுகள், இவற்றின் பல கால்வாய்கள்: இவற்றை யெல்லாம் தாண்டி உச்சி வேளைக்கு முன் கங்கையின் அலைவீசும் நீர்ப்பரப்பைக் கண்ணுற்றார்கள்:

சுருதி கற்றுயர்
தோமிலர் சுற்றுறும்
விரிதி ரைப்புனல்
கங்கையை மேவினர்.

[சுருதி—வேதங்கள். கற்றுஉயர்—கற்று உயர்தர வாழ்வு வாழும். தோமிலர்—குற்றமற்றவர்கள். சுற்றுறும்—சூழ்ந்து தங்கப்பெற்ற. விரி திரைப் புனல்—அலைகளோடு கூடிய நீர்ப் பரப்பு. மேவினர்—விரும்பி அடைந்தார்கள்.]

'இத்தெய்வ நதியைப் பார்க்க வேண்டும், கண்புரிந்த தவமாக; கங்காதீர வாஸிகளான தவசிகளையும் தரிசித்துப் பேறு பெற வேண்டும்' என்று வந்தார்கள்: இக்கரையில் தங்கி வாழும் தபோதனர்களோ 'நாம் தேடிப் போன தெய்வம் நம்மைத் தேடி வந்ததே, என்ன பாக்கியம்!' என்ற உணர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் ராமனைத் தரிசிக்க வேண்டுமென்று எதிர்கொண்டு வந்துவிட்டார்கள் :

கங்கை என்னும்
கடவுள் திருநதித்
தங்கி வைகும்
தபோதனர் யாவரும்
'எங்கள் செல்கதி
வந்த(து)!' என்(று) ஏமுறு,
அங்கண் நாயகற்
காணவந்(து) அண்மினர்.



[கடவுள் திருநதி—சிறந்த தெய்வ நதி. வைகும்—வாழ்கின்ற. தபோதனர்—தவத்தைத் தனமாகவுடைய முனிவர்கள். எங்கள் செல்கதி — நாங்கள் சென்று அடைய வேண்டிய நற்கதி. ஏமுறு — மகிழ்ச்சியடைந்து. அங்கண் நாயகன்—அழகிய கண்களையுடைய தலைவனாகிய ராமன். அண்மினர் — நெருங்கினார்கள்.]


'எங்கள் செல்கதி வந்தது!' என்று பார்க்க வந்தவர்கள் அந்தக் கண்ணழகிலேயே தங்கள் கதியைக் கண்டு விட்டதுபோல் ஈடுபட்டு நிற்கின்றார். துறவிகளாயினும்,

காதலியை நோக்கும் காதலன் அடைகின்ற காதற் சுவையை ஓர் உருவமாகப் பார்ப்பது போல் பார்க்கிறார்களாம் ராமனை. சொல்ல முடியாத இன்பத்தைப் பொங்கிவரும் எண்ணங்களுக்கிடையே கவிஞர்கள் காண்கிறார்கள் அல்லவா, அகக்கண் முன்பு? அத்தகைய கவியின்பத்தைப் புறக்கண்ணால் பார்த்து விடுகிறார்களாம் முனிவர்கள், ராமனைப் பார்க்கும் போது. சங்கீதத்தில் சொக்கிப் போகும் ரஸிகர்கள் தேவாமிர்தத்திற்கும் மேலான ஓர் இசையமுதைக் கண்டு களிக்கிறார்கள் இதயத்திலே: அத்தகைய அமுதை ஞானக் கண்களால் நோக்கும் பேறுபெறுகிறார்கள் முனிவர்கள்! ராமனைக் கண்கள் நோக்க, உள்ளம் கள்வெறி கொள்ளுகிறது.

பக்தியா காதலா ?

இங்ஙனம் ராமனைக் கண்ட கண்களைப் 'பசுங்கண்' என்கிறான் கவிஞன். பச்சைப் பசுங் குழந்தைபோல் பார்க்கிறார்களாம்: 'ஞானக் குழந்தை'களல்லவா ?

பெண்ணில் நோக்கும்
    சுவையின் பிறர்,பிறர்க்கு
எண்ணில் நோக்கி
    இயம்பரும் இன்பத்தைப்.



பண்ணில் நோக்கும்
பராஅமு தைப்,பசுங்
கண்ணின் நோக்கினர்,
உள்ளம் களிக்கின்றார்.

[சுவையின் — சுவை போல. எண்ணில் — எண்ணங்களில். இயம்பரு — சொல்ல முடியாத. பரா அமுது — பர அமுது ; சிறந்த அமுது.]

இத்தகைய ஆனந்த வெறியோடு எதிர்கொண்டு சென்ற முனிவர்களை ராம ஸௌந்தரியம் என்ன பாடு படுத்துகிறது !

எதிர்கொ(டு), ஏத்தினர்,
இன்னிசை பாடினர் ;
வெதிர்கொள் கோலினர்
ஆடினர் ; வீரனைக்
கதிர்கொள் தாமரைக்
கண்ணனைக் கண்ணினால்
மதுர வாரி
அமுதென மாந்துவார் !

[கொடு — கொண்டு. ஏத்தினர் — துதித்து. வெதிர்கொள் கோலினர் — மூங்கிலால் இயன்ற தண்டத்தை யுடையவர்கள்: இக்கோல் இவர்களுடைய ஆசிரமத்திற்கு ஓர் அறிகுறி. கதிர் — ஒளி. மதுர வாரி அமுது — மதுரமான கடலில் தோன்றிய அமுதம். மாந்துவார்— பருகுவார்.]

ராமனை முனிவர்கள் துதிக்க ஆரம்பித்ததும், அது வசனத்தில் அடங்காமல் இன்னிசைப் பாடலாகப் புறப்பட்டதாம். அந்தத் திரி தண்ட சன்னியாசிகள் பாடிப் புகழ்ந்ததோடு ஆடவும் தொடங்கி விட்டார்கள் ! ஆடிப்பாடி அந்த உத்ஸாகத்தை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டு மறுபடியும் அந்தக் கண்களைப் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். ஏன், அந்தக் கண்ணனைக் கண்ணினால் மதுரக் கடலமுதத்தைப் பருகுவதுபோலத் தாகமும் தாபமும் தீரப் பருகுவாராயினர். இத்தகைய வசீகர ஒளி வாய்ந்த ராமனது கண்களைக் 'கதிர் கொள் தாமரைக் கண்' என்கிறான் கவிஞன்.

கனவா, நனவா ?

இவ்வண்ணம் ராமாமிர்தம் பருகியவர்களின் உணர்ச்சியை, கனவுகளை என்னென்பது ? ஒரு வீடு புத்திர சம்பத்தால் பொலிகின்றது. திடீரென்று பிள்ளைகளைக் காணவில்லை : ஒருவனா, இருவரா ? பிள்ளைகளெல்லாம் காணப்பட வில்லை. பெற்றோர் தேடத் தொடங்கினார்கள் ; காணவில்லை. தேடிக்கொண்டே யிருந்தார்கள் ; காணவில்லை. நாள்தோறும் தேடுவாராயினர் ; காணவில்லை. தேடித் திரிவதும், அலுத்துப் போய் மனைக்குத் திரும்புவதும் தினசரி வழக்கமாகி விட்டன. மனையை விட்டு நீங்கிய மக்கள் நெஞ்சை விட்டு நீங்க வில்லை : நாள்தோறும் அந்த ஒரே நினைப்பு. தேடித் தேடி அலுத்துப்போய், 'இனிமேல் காண்பதற்கு வழியே கிடையாது !' என்ற சலிப்பும் வந்து விட்டது. இப்படி

யிருக்க ஒரு நாள் கல கலவென்ற சப்தத்துடன் அந்தக் காணமற்போன பிள்ளைகள் திடீரென்று வந்து விடுகிறார்களாம். தேடித் தேடிக் காணப் பெறாத மக்கள் சுயேச்சையாக எங்கிருந்தோ எப்படியோ வந்து குதிக்கி றார்கள் என்றால், எவ்வளவு பேராவலுடன், எவ்வளவு ஆத்திரமாகவும் குதூகலமாகவும், பெற்றோர் எதிர்கொண்டு ஓடுவார்கள், மக்களை வரவேற்கும் பொருட்டு! இத்தகைய உணர்ச்சியுடன் எதிர்கொண்டு வரவேற்றார்களாம் ராமனை முனிவர்கள்.

'ஞான கங்கை' என்று சொல்லத் தக்க முனிவர்களின் இவ் வுணர்ச்சிக் கனவைப் பின்வரும் பாட்டில் கண்டு களிக்கலாம்:

மனையின் நீங்கிய
    மக்களை வைகலும்
நினையும் நெஞ்சினர்,
    கண்டிலர், நேடுவார்,
அனையர் வந்துற
    ஆண்(டு)எதிர்ந் தார்களின்,
இனிய மாதவப்
    பள்ளிகொண்(டு) எய்தினர்.

[வைகலும் — நாள்தோறும். கண்டிலர் — காணப்பெறாமல். நேடுவார் — தேடுவார். அனையர் — அந்தப் பிள்ளைகள். வந்துற — வந்துசேர. ஆண்டு — அப்பொழுது. எதிர்ந்தார்களின் — எதிர்ப்பட்ட பெற்றோர்கள் போல. மாதவப்பள்ளி — சிறந்த ஆச்ரமம். எய்தினர் — அடைந்தார்.]





பி. ஸ்ரீ.

173. ஓமத் தீயும் காட்டுத் தீயும்

உபசாரம் என்றால் சாமானிய உபசாரமா? நீராட்டுகிறார்களாம், உணவு ஊட்டுகிறார்களாம்; ஆனால், சாதாரண உணவா? சாமானிய மலரா? நீராட்டம் கங்கா ஸ்நானம் தானா?

பொழியும் கண்ணில்
 புதுப்புனல் ஆட்டினர்,
மொழியும் இன்சொலின்
 மொய்ம்மலர் சூட்டினர்,
அழிவில் அன்பெனும்
 ஆரமிர்(து) ஊட்டினர்,
வழியின் வந்த
 வருத்தத்தை வாட்டினர்.

[பொழியும்—சொரியும். புதப்புனல்—புது நீர். இன்சொலின்—இனிய சொல்லாகிய. மொய் மலர்—(இங்கே) நெருங்கித் தொடுத்த மலர் மாலை. அழிவில்—அழிவில்லாத. ஆர்அமிழ்து—நிறைந்த அமுதம். வாட்டினர்—போக்கினார்கள்.]

ஓமத் தீயா? அன்புத் தீயா?

முனிவர்கள், ஆனந்த பாஷ்யம் பொழிந்து புதுப் புனல் ஆட்டியதும், உபசார இன் சொற்களாகிய மலர்களைச் சூட்டியதும், நிறைந்த - அழிவில்லாத - அன்பாகிய அமிர்தத்தை ஊட்டியதும் ராமனுக்கு வெகுதூரம் வழி நடந்து வந்த வருத்தத்தைப் போக்கி விடு

கின்றன. இத்தகைய அன்புப் பெருவிருந்தை அனுபவிப்பதற்கு, எவ்வளவு தூரம் நடந்து வந்தால்தான் என்ன! எவ்வளவு தூரம் களைத்துப் பசித்து வந்தால்தான் என்ன?

இந்த உபசாரத்திற்குப் பின்பு, நீராடி அமுது செய்யுமாறு வேண்டிக் கொள்கிறார்கள் :

'காயும் கானில்
கிழங்கும் கனிகளும்
தூய தேடிக்
கொணர்ந்தனம், தோன்றல்நீ!
ஆய கங்கை
அரும்புனல் ஆடினை,
தீயை ஓம்பினை,
செய்அமு(து)' என்றனர்.

[தோன்றல்நீ — மகனாகிய நீ. ஆய—அருகிலுள்ள. ஆடினை — ஆடி. ஓம்பினை — தீயை வளர்த்தவனாய்.]

"காட்டிலிருந்து காய் கிழங்கு கனிகள் முதலான தூய உணவுப் பொருள்களைத் தேடிக்கொண்டு வந்தோம். மகனே! கங்கா ஸ்நானம் செய்து அக்கினி ஹோத்திரமும் செய்து விட்டு அமுது செய்வாயாக" என்று வேண்டிக் கொள்கிறார்கள். "என்ன தூய அன்பு! என்ன அபூர்வமான உபசாரம்!" என்று அதிசயிக்கிறீர்கள் அல்லவா? ஆனால் இதற்கும் மேலான ஓர் அன்பு இருக்கிறது, உபசாரமும் இருக்கிறது : ஆம், வேடர் தலைவனும் அன்பு செய்து உபசரிக்கப் போகிறான். இந்த அன்பு ஹோமாக்கினி : அதுவோ காட்டுத் தீ!

நாயும் செருப்புமாய்......

ஆச்ரமத்திலே முனிவர்கள் இட்ட விருந்தை உண்டு அவர்களோடு ராமன் அளவளாவிக் கொண்டிருக்கும்போது, பம்பை முதலிய பறைகளை ஏக காலத்தில் கொட்டி முழக்கும் ஓசை திடீரென்று காதில் விழுகிறது, கொஞ்ச தூரத்திலிருந்து. உடனே பெருவலிமையும் தோற்றமும் படைத்த ஒரு பெருங் கூட்டம், மத யானைகள் மந்தையாகத் திரண்டு வருவது போல் வந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதோ அந்தக் கூட்டத்தின் முகப்பிலே, வேட்டை நாயைப் பிடித்துக் கொண்டு, இடியிடித்துக் கிளம்பும் காளமேகம் போலக் கிளம்பிய அவன் யார்?

அந்த முரட்டுக் கால்களில் மாட்டி யிருக்கும் தோற் செருப்பைத் தான் பாருங்கள். அந்தச் செருப்பு வேறு எந்தக் காலுக்குத்தான் சரியா யிருக்கும்? எங்கேயானாலும் போட்டு விட்டுக் கவலையில்லாமல் போகலாமே!

துடியன், நாயினன்,
தோல்-செருப்(பு) ஆர்த்தபேர்
அடியன், அல்செறிந்(து)
அன்ன நிறத்தினன்.

நெடிய தானை
நெருங்கலின், நீர்முகில்
இடி(யி)னோ(டு) எழுந்
தால்அன்ன ஈட்டினன்!

[துடியன் – வேடர்களுக்குரிய ஒருவகைப் பறைக்கொட்டை உடையவன். நாயினன் - வேட்டை நாயைப் பிடித்துக் கொண்டு வருகிறவன். ஆர்த்த – தரித்துக்கொண்ட. பேர்அடியன் – பெரிய அடிகளை யுடையவன். அல் – இருட்டு. செறிந்துஅன்ன – நெருங்கி வடிவு கொண்டது போன்ற. நெடிய தானை – பெரிய சேனை. முகில் – மேகம். எழுந்தால் அன்ன – கிளம்பி வந்தால் ஒத்த. ஈட்டினன் – தன்மை கொண்டவன்.]

ஆயிரம் தோணிக்கு அரசு!

இருட்டு நெருங்கி இறுகி வடிவு கொண்டதுபோல வந்து கொண்டிருக்கும் அந்த ஆசாமி சாமானிய ஆசாமியில்லை; கங்கையிலே குறுக்கும் நெடுக்குமாக ஆயிரம் தோணிகள் போய்க் கொண்டிருக்கின்றனவே, அவையெல்லாம் அவனுக்குத்தான் சொந்தம்! அவன் தயவில்லாமல் யாரும் கங்கையைக் கடந்து போக முடியாது. கங்கைத் துறைகளில் தோணியோட்டும் தொழிலைக் குல தர்மமாகக் கொண்டிருக்கிறான். துடுப்பு எடுத்த கை வில்லும் பிடித்து, துஷ்ட மிருகங்களையே பகைவர்களையோ ஹிம்ஸித்த வண்ணமாய் இருக்கும்.

குகன் என்ற அவனுடைய பெயர் இந்தப் பிரதேச மெங்கும் ஒரே முழக்கம்: 'போர்க் குகன்' என்றே சிறப்பித்துப் பேசுவார்கள்:

ஆய காலையின்
ஆயிரம் அம்பிக்கு
நாய கன்,போர்க்
குகன்எனும் நாமத்தான்,
தூய கங்கைத்
துறைவிடும் தொன்மையான்,
காயும் வில்லினன்,
கல்திரள் தோளினன்.

[ஆயகாலையின் – அந்தச் சமயத்தில்; ராமன் முனிவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த சமயத்தில். அம்பி – தோணி. நாயகன் – தலைவன். துறைவிடும் தொன்மையான் – தோணித் துறைக்குப் பழமையான பரம்பரைப் பாத்தியம் உள்ளவன். காயும் – ஹிம்ஸிக்கும். கல்திரள் – கல்லைப்போல் திரண்ட.]

எண்ணெய் தேய்த்த இருட்டு

கல்லென்று சொல்லும்படியான தோளில் வில்லைத் தாங்கி வருகிறானே, அவன் மார்பும் ஒரு கற்பாறை போல இருக்கிறது. காலில் கட்டிய வீரக் கழலும் கருங்கல்லைப் பொருத்தி யிருப்பதைப் போலவே காண்கிறது:

கண்அ கல்தட
மார்பெனும் கல்லினன்,
எண்ணெய் உண்ட
இருள்புரை மேனியான்.

[கண் அகல் — இடம் அகன்ற. தடமார்பு — விசாலமான மார்பு இருள்புரை — இருளையொத்த.]

எண்ணெய் தேய்த்து வரும் இருட்டைப் போன்ற அந்தத் திருமேனியும், அந்த வேடர் - கூட்டத்திலும் கூட நீண்டு நிமிர்ந்து காணும் உருவமும், அந்த உடை விசேஷமும் நமது பார்வையை அப்புறம் இப்புறம் செல்லவிடாமல் பிணித்து விடுகின்றன :

காழம் இட்ட
குறங்கினன், கங்கையின்
ஆழம் இட்ட
நெடுமையி னன்,அரைத்
தாழ விட்டசெந்
தோலன், தயங்குறச்
சூழ விட்ட
தொருபுலி வாலினன்,

[காழம் — ஒரு வகைச் சல்லடம்; அரையிலிருந்து தொடை வரையில் அணியும் சிறு கால்சட்டை. குறங்கினன் — தொடையை உடையவன். நெடுமையினன் — நீண்டவன். தயங்குற — விளங்குமாறு; அழகாய்த் தோன்றும்படி.]

தொடை வரையில் சல்லடம்; அரையில் தொங்கவிட்ட செந்நிறமான தோல்; அந்தத் தோலாடை நழுவி விழாதபடி அதைச் சுற்றி அரைக் கச்சாக இறுக்கிக் கொண்டிருக்கும் புலிவால். ஆம், உடையும் கச்சையும் பார்வைக்கு வெகு ஜோராகவும் அந்தஸ்தாகவும் இருக்கின்றன, வேடர் கண்களில்!

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

174. என்ன பெருமை, என்ன பணிவு!

ஆடையில்தான் எவ்வளவு செட்டு! ஆனால் அந்தப் பேர்வழி அணிந்திருக்கும் ‘ஆபரண விசேஷ’ங்களை என்னென்பது? அரைக் கச்சையில் கூர்மையான உடைவாளைச் செருகியிருக்கிறான்; அந்த உடைவாளில் இரத்தக் கறை தெரிகிறது. உடைவாளும் வில்லும் வீரக் கழலும் வேடர்பிரானுடைய சிறந்த உபயோகமான ஆபரணங்கள். இவை தவிர அவன், பல்லைத் தொடுத்து வைத்தாற்போலச் சோகிகளைத் தொடுத்து ஆரங்களாக அணிந்திருக்கிறான். இருள்மேல் இருள் தொடுத்தாற்போல இருக்கும் மயிர்முடியில் நெற்கதிர்களைச் சொருகிக் கொண்டிருக்கிறான்.

என்ன பெருமை இவை?

குகன் வந்துகொண்டேயிருக்கிறான்: கவிஞன் அடிக்கடி படம் பிடித்துக் காட்டுகிறான். இதோ இந்தப் படத்தையும் பாருங்கள்:

கச்சொ(டு) ஆர்த்த
　　கறைக்கதிர் வாளினன்;
நச்ச ராவின்
　　நடுக்குறு நோக்கினன்;
பிச்ச ராம்அன்ன
　　பேச்சினன்; இந்திரன்
வச்சி ராயுதம்
　　போலும் மருங்கினன்!

[ஆர்த்த — சேர்த்துக் கட்டிய. கறை — இரத்தக் கறை. கதிர் வாளினன் — ஒளி வீசும் கூர்மையான வாளை உடையவன். நச்சராவின் — நஞ்சையுடைய சர்ப்பத்தைப் போல. பிச்சர் — பித்தர்; பைத்தியக்காரர். அன்ன — போன்ற. மருங்கினன் — இடையை யுடையவன்.]

சிரிப்பே அறியாத அந்த முகத்தையும், கோபமில்லாமலே தீப்பொறி பறக்கும் கண்களையும், விஷப் பாம்புபோல நடுங்கச் செய்யும் பார்வையை

யும் இப்போது சமீபத்தில் பார்க்கிறோம். யமனும் நடுங்கும்படி முறுக்கும் குரலும், வைத்தியக்காரன் போலப் பொருத்தமில்லாமல பேசும் பேச்சும் காதில் விழுகின்றன.

கங்கையைத் தாண்டி வந்தானே, ஒரு தரம் முங்கித்தான் வரலாகாதா? மாமிசம் தின்று கள்ளைக் குடித்த வாயையாவது கழுவி வரலாகாதா?

என்ன மாறுதல் இது?

ராமன் இருக்கும் ரிஷி - ஆச்ரமத்தைச் சமீபித்ததும், குகனிடம் தான் என்ன அதிசயமான மாறுதல்! கொஞ்ச தூரத்திலேயே பரிவாரத்தை நிறுத்தி விடுகிறான்; அம்பு வில் வாள் எல்லாவற்றையும் கழற்றி வைத்துவிட்டு வருகிறான். சிறுமை யுணர்ச்சிகள் மறைந்து உள்ளத்திலே அன்பு நிறைந்து கொண்டிருக்கிறது! அந்த இடத்தை எவ்வளவோ நன்றாக அறிந்தவன் தான்: எனினும் முன் பின் அறியாத ஏதோ ஒரு புண்ணிய பூமியில் அடி வைத்துப்போவதுபோலப் போகிறான்:

சுற்றம் அப்புறம்
    நிற்கச் சுடுகணை
வில்து றந்(து)அரை
    வீக்கிய வாள்ஒழித்(து),
அற்றம் நீத்த
    மனத்தினன், அன்பினன்,
நற்ற வப்பள்ளி
    வாயிலை நண்ணினான்.

[சுற்றம் - பரிவாரம். கணை - அம்பு; (இங்கே) அம்பு நிறைந்த தூணி. அரை வீக்கிய – அரையில் கட்டிய. அற்றம் - குற்றம். நீத்த - நீங்கிய. தவப் பள்ளி - தவத்திற்கு உரிய ஆச்ரமம். நண்ணினான் - கிட்டினான்.]

'நாயடியேன்!'

பர்ணசாலையின் வாசலுக்குச் சமீபமாக வந்ததும் விலகி நின்று கொண்டே கூவுகிறான், 'அடியேன்' என்று. லட்சுமணன் ஓடி வந்து, 'நீ யாரப்பா?' என்று கேட்கிறான். 'தேவ பூஜை வேளையில் காடி வந்தது போல் வந்திருக்கிறாயே!' என்பது குறிப்பு. லட்சுமணனையே ராமன் என்று கருதும் குகன் அன்போடு ஒரு கும்பிடு போட்டுத் தான் யாரென்று தெரிவித்துக் கொள்கிறான்:

கூவா முன்னம்
    இளையோன் குறுகி, 'நீ
ஆவான் யார்?' என,
    அன்பின் இறைஞ்சினான்,
'தேவா! நின்கழல்
    சேவிக்க வந்தனன்;
நாவாய் வேட்டுவன்
    நாயடி யேன்!' என்றான்.

[கூவாமுன்னம் — கூவியவுடனே. இறைஞ்சினான் — வணங்கினவனாய். கழல் — பாதம். நாவாய் — ஓடம். வேட்டுவன் — வேடன். நாயடியேன் — நாய் போன்ற கடைப்பட்ட அடியவனாகிய நான்.]

எவ்வளவோ வலிமைச் செருக்கும் சுதந்திரச் செருக்குமுள்ள வேடர் தலைவன் இப்பொழுது 'நாய் அடியேன்' என்று எவ்வளவு பணிவாகத் தன்னைத் தெரிவித்துக் கொள்ளுகிறான், பாருங்கள்.

ராமனது குணாதிசயத்தைக் கேள்விப்பட்டு, அதிலே அவ்வளவு ஈடுபட்டு வந்திருக்கிறான். திறந்த வாசல்தோறும் நுழைந்து நுழைந்து பார்த்தும் புகலிடம் பெறாத நாய்போல், இவனுடைய உள்ளமும், உயர்ந்தோன் ஒருவனது நட்புக் காதலைப் பெற விரும்பி அத்தகைய விருப்பம் அந்த முனிவர்கள் மூலமாக நிறைவேறாததால், அலைந்து அலைந்து அலுத்துப் போயிருக்கிறது!

பாட்டைப் பாடிப் பாடிப் பாருங்கள். அந்த முரட்டுச் சரீரத்தில் குடிகொண்டிருக்கும் பொன்னான இதயத்தை அப்படியே பார்த்து விடுகிறீர்களல்லவா?

தயக்கமும், நற்சாட்சிப் பத்திரமும்

குகனுடைய அன்பும் பணிவும் லட்சுமணனை வசீகரித்து விட்டன. எனினும் உடனே வேடனை ஆச்ரமத்திற்குள் அழைத்துப் போகவில்லை. 'இங்கேயே இரு' என்று வாசலில் நிறுத்திவிட்டுத் தம்பி தமையனிடம் செய்தி தெரிவிக்கிறான். 'தாழ்ந்த வகுப்பினனை எப்படி அழைத்துப் போவது?' என்று லட்சுமணன் தயங்குவது போலத் தோன்றுகிறது!



ஆனல், ராமனிடம் போய் லட்சுமணன் குகனைப் பெரிதும் புகழ்ந்து நற்சாட்சிப் பத்திரம் அளிக்கிருன் :

'நிற்றிஈண்(டு)' என்று புக்கு,
நெடியவன் தொழுது தம்பி,
'கொற்றவ! நின்னைக் காணக்
குறுகினன், நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும் தானும், உள்ளம்
தூயவன், தாயின் நல்லான்,
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்(கு)
இறைகுகன் ஒருவன்' என்ருன்.

[நிற்றிஈண்டு — இங்கேயே நில்லு. புக்கு — புகுந்து. நெடியவன் பெருமை பெற்ற தமையன். கொற்றவ — வெற்றி பொருந்தியவனே. குறுகினன் — சமீபத்தில் வந்திருக்கிருன். நிமிர்ந்த — பெரிய. தாயின் — தாயைக் காட்டிலும். எற்று நீர் — மோதுகின்ற அலையோடு கூடிய தண்ணீர். நாவாய் — தோணி. இறை — தலைவன்.]

'அந்தச் சாதி அவனுக்கு இல்லை!'

அவனுடைய அடக்க ஒடுக்கத்தையும், ராமன் மீது அவனுக்கு உள்ள பேரபிமானத்தையும் அறிந்து இன்புற்ற லட்சுமணன், கரையில் கங்கை மோதுவது போல் அம் முகத்திலே அலைமோதிய உணர்ச்சிப் பெருக்கை அப்படியே அனுபவித்த நிலையில், குகனைத் தூய மனமுள்ளவன் என்றும், தாயைக் காட்டிலும் நல்லவன் என்றும், வாயார நெஞ்சாரப் புகழ்ந்து பேசுகிருன். ('கைகேயி போன்ற தாயும் உலகத்தில் இருக்கிருளே!' என்ற உணர்ச்சியும் லட்சுமணனுக்கு உண்டல்லவா?)

'அப்படியானல் அவனை இங்கேயே என்னிடம் அழைத்துவா' என்று மனமுவந்து சொல்லுகிருன் ராமன். 'தூய உள்ளமும் தாயுள்ளமும் வாய்ந்த நல்லவர்களுக்குத் தாழ்ந்த குலம் ஏது?' என்பது ராமன் கருத்து.

பள்ளமடை வெள்ளம்போலே!

'அந்தக் குலம் அவனுக்கு இல்லை!' என்று ராமன் அழைத்ததும், அன்பு பிடித்துத் தள்ளக் குகன் போகும் விரைவைப் பாருங்கள் :

அண்ணலும் விரும்பி 'என்பால்
அழைத்திநீ அவனை' என்ருன்
பண்ணவன் 'வருக' என்னப்,
பரிவினன் விரைவில் புக்கான்:
கண்ணனைக் கண்ணில் நோக்கிக்
கனிந்தனன்; இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து, மேனி
வளைத்து,வாய் புதைத்து நின்ருன்.

[அண்ணல் — (இங்கே) ராமன். என்பால்—என்னிடம். அழைத்தி — அழைத்து வருவாய். பண்ணவன்— (இங்கே) மனத் திண்மை வாய்ந்த லட்சுமணன். பரிவினன் — அன்புருவமாக நின்ற குகன். புக்கான் — புகுந்தவனாய். கனிந்தனன் — மனம் கனியப் பெற்றவனாகி. குஞ்சி — தலைமயிர்.]

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

175. ஆசாரம் எது ?

ராமனைக் கண்ணில் கண்டதும் குகனுள்ளம் கனிந்து விடுகிறது, காதலால். 'என்ன பேரன்பு!' என்று நாம் வியக்கும்போதே, 'என்ன பெரும் பணிவு!' என்றும் அதிசயிக்கும்படியாகக் குகன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து எழுந்து கைகட்டி வாய் புதைத்து நிற்கிறான். மெய்யன்பு உள்ள இடத்தில் மெய்யான பணிவும் காணப்படுவது இயற்கை. பூரண அன்பும் பூரணமான பணிவும் ஓர் அழகிய நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

கண்டதும் காதலா ?

குகன் ராமனுக்கு ஏற்கெனவே ஆத்ம நண்பனாக இருந்தான் என்று வால்மீகத்தால் அறியப்படுகிறது. 'வேட்டையாடும் போது அப்படிப்பட்ட தோழனாகி யிருக்கவேண்டும்!' என்று கூட ஊகிக்கிறார் உரையாசிரியர் கோவிந்தராஜர். கம்பனோ, குகன் ராமனை இப்போதுதான் முதல் முதல் பார்ப்பதாய்க் கற்பனை செய்கிறான். லட்சுமணனை ராமன் என்று மயங்கி, 'தேவா! உன்னைச் சேவிக்க வந்தேன்' என்று கம்பனது குகன் கூறுவதால், ராமனாவது லட்சுமணனாவது குகனுக்கு ஆருயிர்த் தோழருமில்லை, இதற்கு முன் அறிமுகமானவருமில்லை யென்று தெரிகிறது.


மேலும் குகன் வருவதை அறிந்து ராமன் லட்சுமணனோடு எதிர் சென்று அவனை அடைந்தான் என்கிறது வால்மீகம். கம்பனது குகனோ கங்கைக் கரையில் ராமன் நாட்டை விட்டு வந்திருக்கிறான் என்பதை அறிந்து தானாகவே பார்க்க வருகிறான். ராமனது தியாகமாகிய தெய்வ குணத்தைப் பொதுவாகக் கேள்விப்பட்டு, 'தேவா!' என்று குறிப்பிடுவதாய்க் கருதலாம். நேரில் கண்டதும் ராமனது தியாக ஸௌந்தரியம் குகனுள்ளத்தை மேலும் மேலும் வசீகரித்துப் பைத்தியமாக அடித்து விடுகிறது; ஏன், அவனை ஒரு 'காதல'னாக்கி விடுகிறது! சில அம்சங்களில் காதலும் பைத்தியமும் ஒரு ஜாதி தானே ?

எட்டாத ஏணியும் எட்டியது!

முனிவர்களைக் கண்டு கனியாத உள்ளம் இப்போது கனிவெய்து கிறது. ஆச்ரமத்திலே அகப்படாத புகலிடம் இப்போது ஆச்ரமத்திலேயே ராம ஸந்நிதியில் கிடைத்துவிட்டது. அலைந்து அலுத்துப் போன உள்ளம் ஆறுதல் பெற்றுவிட்டது. முனிவர்களும் தவ ஏணி வைத்து ஏறிப் பிடிக்க முடியாத பாக்கியம் அந்த முனிவர்களைத் தான் தேடி வந்ததா? இந்த வேடனைத்தான் தேடி வந்துவிட்டதா?

ராமன் உட்காரச் சொல்லியும் இணங்காமல், ‘தேனும் மீனும் பக்குவம் செய்து கொண்டு வந்திருக்கிறேன்; உட்கொள்ளத் திருவுள்ளம் உண்டோ?’ என்று கேட்டு நிற்கும் குகனுடைய நிலையையும், அது கண்ட ராமனது நிலையையும் பாருங்கள்;

‘இருத்திஈண்(டு)’ என்ன லோடும்
இருந்திலன், எல்லை நீத்த
அருத்தியன், ‘தேனும் மீனும்
அமுதினுக்(கு) அமைவ தாகத்
திருத்தினென் கொணர்ந்தேன்:
என்கொல்
திருவுளம்?’ என்ன, வீரன்
விருத்தமா தவரை நோக்கி,
முறுவலன் விளம்ப லுற்றான்.



[இருத்தி — உட்கார வேண்டும். எல்லை நீத்த — வரம்பில்லாத. அருத்தியன் — பேரன்புடையவன். திருத்தினென் கொணர்ந்தேன் — பக்குவம் செய்து கொண்டு வந்திருக்கிறேன். என்கொல் — என்னவோ. விருத்த மாதவர் — வயது முதிர்ந்த முனிவர்கள். முறுவலன் — இளநகையை அரும்பியவனாய். விளம்பலுற்றான் — சொல்லத் தொடங்கினான்.]

இளநகையின் பொருள்

ராமன் குகன் சொன்னதைக் கேட்டதும் வயது முதிர்ந்த பிரம்ம ரிஷிகளைப் பார்த்து இளநகை யரும்புகிறான். இந்த இளநகையின் பொருள்தான் என்ன? 'காய் கிழங்கு கனி இலை ஆகிய தூய உணவை உண்டு வாழும் தவசிகளின் புனிதமான பர்ணசாலையில் ஊனையும் தேனையும் கொண்டுவந்தேன் என்கிறானே, என்ன அறியாமை! என்ன ஆசாரக் குறைவு!' என்பது தான் இளநகையின் பொருளா?

குகன் கொண்டுவந்த பொருள்கள் மீனும் தேனுமாகவா தெரிகின்றன ராமன் கண்களில்? அவற்றில் அன்புக் காதலைத்தான் பார்க்கிறான்; குகனுடைய தூய உள்ளத்தைப் பார்க்கிறான். ஆகவே, 'தேவாமிர்தத்தைக் காட்டிலும் சிறந்தன இவை!' என்று மதிக்கிறான். இக்கொள்கையை இளநகையோடு ராமன் முனிவர்களுடன் பங்கிட்டுக் கொள்வதைப் பாருங்கள்:

'அரியதாம், உவப்ப, உள்ளத்(து)
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த தென்றால்
அமிர்தினும் சீர்த்த தன்றே!
பரிவினில் தழீஇய என்னில்
பவித்திரம்; எம்ம னோர்க்கும்
உரியன; இனிதின் நாமும்
உண்டனெம் அன்றோ?' என்றான்.



[உவப்ப — மனம் மகிழ்ச்சி யடைய. தெரிதர — தெரியும்படி. சீர்த்தது — சிறந்தது. பரிவினில் தழீஇய — அன்போடு தழுவியவை. பவித்திரம் — பரிசுத்தம். எம்மனோர்க்கும் — எம்மைப் போன்றவர்களுக்கும். இனிதின் — இனிமையாக. உண்டனெம் அன்றோ — உண்டதற்குச் சமானமே அன்றோ.]

'கிடைப்பதற்கு அரிதாயும் தனக்கு உவந்ததாயும் உள்ள ஒரு பொருளை அன்புக் காதல் விளங்க ஒருவன் கொண்டு வந்தால், அது தேவாமிர்தத்தைவிடச் சிறந்ததல்லவா? எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் இத்தகைய பொருள்கள் உரியன; பரிசுத்தமானவையே. இவற்றை உட்கொள்ளாவிட்டாலும், நாங்கள் உண்டதற்குச் சமானம் தான்!'' என்கிறான்.

பிரம்ம ரிஷிகளும் ராஜ ரிஷிகளும்

இவ்வளவு உணர்ச்சி — வேகத்துடன் பேசும் போது,

'பரிவினில் தழீஇய என்னில்
பவித்திரம்'

— அதாவது, அன்பாலும் இரக்கத்தாலும் தழுவப்படுவதே பரிசுத்தம் அல்லது ஆசாரம் என்று கூறிவிடுகிறான் ராமன். இதைக் காட்டிலும் சுருக்கமாகவும் அழகாகவும் தெளிவாகவும் ஆசாரம் இன்னதென்பதை யாரால் வரையறுத்துக் கூற முடியும்? அன்பு தழுவாத பொருளில், இரக்கம் கலவாத இடத்தில், பரிசுத்தம் எது, ஆசாரம் எது? இது ராமனைப் போன்ற ராஜ ரிஷிகளின் கொள்கை.

ஆசாரத்தின் ஸாரம், அன்பும் இரக்கமும் தழுவிய நிலைதான் என்ற பரந்த நோக்கைப் பிரம்ம ரிஷிகளைக் காட்டிலும் ராஜ ரிஷிகள் அதிக அளவில் வற்புறுத்தினார்கள் என்று ஊகிக்கலாம். இக் கொள்கையையே பக்தர்களும் ஆதரிக்கிறார்கள்; கம்பனும் ஆதரிக்கிறான்.

இரண்டு கொள்கைகள்

காடும் மேடுமாக இரவெல்லாம் அலைந்து வந்த மகனைத் தந்தை, 'விரைவில் போய் நீராடி வந்து சாப்பிடு' என்கிறான். தாயோ, 'குழந்தாய்! அலுத்து வந்திருக்கிறாயே, பசிக்குமே; கொஞ்சம் சாப்பிடு; பிறகு மற்றக் காரியங்களைப் பார்த்துக் கொள்ளலாம்!' என்பாள். தாயுள்ளம் குகனுள்ளம்; தந்தையுள்ளம் முனிவருள்ளம்.

அலைந்து பசித்து வந்த ராமனைக் கண்ணுற்ற முனிவர்கள் புத்திர வாஞ்சையுடனே, "கங்கையில் நீராடி நிர்மலனாய் அக்கினி ஹோத்திரம் செய்து வா; காய் கனி முதலான தூய உணவுகளைத் தயாராக வைத்திருக்கிறோம்" என்றார்கள். பசியனுக்கும், உணவுக்கு மிடையே நீரும் நெருப்புமாக இரண்டு தடைகள்! குகனோ, 'தியாக மூர்த்தியாகக் கோசலச் செல்வன் வந்திருக்கிறான்' என்று கேள்விப் பட்டதும், மீனும் தேனும் பக்குவமாக்கி, 'அலைச்சலுக்கும் பசிக்கும் அருமையான நல்லுணவு!' என்று தன் உள்ளத்திலே தீர்மானித்துக் கொண்டு வந்து, 'திருவுள்ளம் எதுவோ?' என்று எதிர்நோக்கி நிற்கிறான். 'உடனே பசித் தீயை ஆற்றிக்கொள்ள வேண்டும்' என்று உள்ளம் உள்ளத்தோடு பேசுகிறது, உருகி மன்றாடுகிறது.

கம்பனுக்கும் கம்ப — ராமனுக்கும் குகன் கொண்டு வந்தது தூய உணவன்று; கொண்டு வந்தவனும் ஆசார சீலனில்லை; ஒரு முழுக்கும் போடாமல், கள்ளுண்ட வாயும் கழுவாமல் வந்தவன் தான்! எனினும் ராமனுள்ளம், அந்த அன்பிலே, அந்தப் பரிவிலே, ஆசாரத்தை—உண்மையான ஆசாரத்தைக் கண்டுபிடிக்கிறது.

ரிஷிகளின் ஆசாரக் கொள்கையினும், குகனது அன்புக்கொள்கையே ராமன் உகந்த கொள்கை என்பது கம்பன் கொள்கை. இதைச் சரியாகத் தமிழ் மக்கள் இன்று உணர்ந்து ஒழுகுவார்களானால், தீண்டாமைப் பேய் நாட்டைவிட்டுத் தொலைந்து போகாதா?

ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

176. குகன் மதம் - குக ஸித்தாந்தம்

ராமனுக்கும் குகனுக்கும் இடையே தோன்றிய நட்பு வேகமாகவும அற்புதமாகவும் மேலோங்கி வளர்கின்றது. ராமனைப் பார்த்த பின்பு பிரிவதற்கு மனம் வரவேயில்லை. இந்நிலையில் ராமன், 'நாங்கள் இங்கே யிருந்து புறப்பட வேண்டும்; கங்கையைக் கடந்து நாளையே செல்ல வேண்டும். நீ உன் சுற்றத்தார்களோடு ஊருக்குப் போய் மனமகிழ்ந்து இனிது தங்கித் தோணியோடும் விடியற்காலம் இங்கே வருவாயாக' என்று குகனை நோக்கிக் கூறுகிறான்:

சிங்கஏ(று) அனைய வீரன்
பின்னரும் செப்பு வான், 'யாம்
இங்(கு)உறைந்(து), எறிநீர்க் கங்கை
ஏறுதும் நாளை; யாணர்ப்
பொங்கும்நின் சுற்றத் தோடும்
போய்உவந்(து) இனி(து)உன் ஊரில்
தங்கி,நீ நாவா யோடும்
சாருதி விடிய' என்றான்.

[சிங்கஏறு - ஆண் சிங்கம். அனைய - போன்ற. வீரன் - (இங்கே) ராமன். யாம் - நாங்கள். உறைந்து - தங்கி; (இன்றைத்தினம்) வசித்து. எறிநீர்க் கங்கை - அலையடிக்கும் கங்கை. ஏறுதும் - கடப்போம். யாணர் பொங்கும் - வளமாகத் திரண்டு பொங்கும். நாவாய் - தோணி. சாருதி - சேர்வாய்.]

கள்வனா, காதலனா?

ராமன் குகனிடம் தனக்கு ஆகவேண்டிய காரியத்தைத் தெரிவிக்கிறான் இப்பாட்டிலே. குகனுடைய சுற்றத்தை 'வளமாகத் திரண்டு பொங்கும் உன் சுற்றம்' என்று குறிப்பிடுவதைப் பாருங்கள். இக்குறிப்பில் ராமனது இதய அன்பும் அனுதாப உணர்ச்சியும் பால் பொங்குவது போலப்

பொங்கி வழிகின்றன. 'நீ போய் உவந்து இனிமையாகச் சுற்றத்தோடு தங்கி வா' என்ற ராமன் கூறும்போது, முகத்தோடு முகம் பேசுவதாக மட்டும் தோன்றவில்லை; அகத்தோடு அகம் தொட்டு உறவாடுவதாகக் காண்கிறது.

'ஊருக்குப்போய் அங்கே சுகமாகத் தங்கி விட்டு விடியற்காலம் வா' என்றுதான் வேண்டிக் கொள்கிறான் ராமன்; வேறொன்றும் சொல்லிவிட வில்லை. ஆனால் இந்த வேண்டுகோள் வேடர்தலைவனை என்ன பாடு படுத்துகிறது! 'இங்கே எங்களுடன் தங்கலாம் என்று சொல்லவில்லையே, போய் வா என்கிறானே!' என்று வருந்துகிறது குகனுடைய உள்ளம். 'உன்னையா? நானா? இங்கே விட்டுப் போகிறதா? அது எப்படி? அது அவ்வளவு லேசான காரியமா?' என்ற எண்ணங்கள் பொங்கி அலை மோதுவதைப் பாருங்கள்:

> கார்குலாம் நிறத்தான் கூறக்
>   காதலன் உணர்த்து வான்: 'இப்
> பார்குலாம் செல்வ! நின்னை
>   இங்ஙனம் பார்த்த கண்ணை
> ஈர்கிலாக் கள்வ னேன்யான்,
>   இன்னலின் இருக்கை நோக்கித்
> தீர்கிலேன்! ஆன(து) ஐய!
>   செய்குவென் அடிமை' என்றான்.

[கார்குலாம் நிறத்தான்-நீலமேகம் கொஞ்சிக் குலாவுவது போன்ற வசீகர நிறமுள்ள ராமன். காதலன் — இராமனிடம் காதல் செலுத்தத் தொடங்கிய குகன். உணர்த்துவான்-தெரிவிக்கிறான். பார்குலாம் செல்வ - பூலோக மெல்லாம் 'இதுதான் செல்வ'மென்று கொஞ்சிக் குலாவும் படியான ரூப சம்பத்தோடு கூடிய ராமனே. ஈர்கிலா-தோண்டி எறியாத. இன்னல் - துன்பம். இருக்கை - இருப்பு; நிலை. தீர்கிலேன் - விலகிப் பிரிந்து செல்ல மாட்டேன்.]

ராமனுடைய ரூப சம்பத்து — குகனை வசீகரித்து மோகிக்கச் செய்து விட்டது; 'உலகமெல்லாம் குலாவி மகிழத்தக்க செல்வம் இது தான், வேறொன்றுமே யில்லை!' என்று பிரமிக்கச் செய்து விட்டது. இத்தகைய அழகன் — பொற்பட்டாடை யணிந்து இரத்தினக் கிரீடம் சூடி மகிழவேண்டிய மகா சுகுமாரன் — இப்பொழுது ஆண்டி போலச் சடை முடி யணிந்த மரவுரி தரித்திருப்பது கண்டு குகன் நீராய் உருகிப் போகிறான். சீதையைப் போல் தானும் ராமனுடைய கஷ்டங்களைப் பங்கிட்டுக் கொள்ள ஆசைப்படுகிறான்.

கங்கை வேடனும் காளத்தி வேடனும்


'உன்னை இந்த நிலையில் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்கிற கண்களைத் தோண்டி யெறியாத போலி அன்புடைய பாவி அல்லவா நான்?' என்று இந்தக் காதலன் ராமனுக்கு உணர்த்துகிறான் என்றால், இக்காதலின் வேகத்தைத்தான் என்னென்பது? பேரழகனுடைய மாவுரியும் சடை முடியும், இக் கங்கை வேடனுக்குக் காளத்தி வேடனுடைய தியாக — பக்தி உணர்ச்சிகளை யெல்லாம் தோற்றுவிக்கிறது'

காளத்தி வேடனாகிய கண்ணப்பன் சிவபெருமான்மீது சிவ பக்தர்கள் செலுத்தும் பக்திக் காதலுக்கு ஒரு சிகரம் என்கிறார்கள். "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இன்மை கண்டபின்" என்பர் மாணிக்கவாசகர். கண்ணப்பன் தான் வழிபட்ட காளத்திநாதரைப் பிரிந்திருக்க முடியாத மனப்பான்மை பெற்றான்; தன் கண்ணைப் பறித்துச் சிவபெருமானுக்கு அப்பி ஒப்பற்ற தியாகப் பணி புரிந்தான். அயோத்திமா நகரில் செங்கோலேந்திச் சிங்காதனத்தில் கொற்ற வெண்குடைக் கீழ் அமர்ந்திருக்க வேண்டிய திருமேனி தவக்கோலத்தில் காட்டுப் புல்லில் அமர்ந்திருக்கிறதே!—என்று வருந்தும் குகன், 'இக்கோலத்தில் உன்னைக் கண்ட என் கண்களைப் பறித்தெறியாத பாவியானேன். கண்ணப்பனது அத்தகைய பேரன்பு என்னிடம் இல்லையே! அத்தகைய பெருந் தொண்டு ஆற்ற என்னால் முடியாதேனும், இயன்ற தொண்டு செய்து இங்கே தான் இருப்பேன்!' என்று மன்றாடுகிறான்.

'நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான்!' என்று சொல்லிக் காளத்திவேடன் கண்ணைப் பறித்த செயலைக் கங்கை வேடன் நினைப்பூட்டிக் கொள்வதிலே தான் எவ்வளவு உயர்ந்த—ரஸமான—கலைப் பண்பு பொங்கி வெளிப்படுகிறது!

'தீராக் காதலன்'

'நமது அன்பிற்கு உரியவர்களுக்கு நம்மால் இயன்ற குற்றேவல் செய்து அவர்களுடைய துன்பங்களைப் பங்கிட்டுக் கொண்டு நாமும் அனுபவிக்க வேண்டும்' என்ற நட்புக் காதலை மானிடத்தின் 'ஹிருதய சம்பத்து' என்று சொல்லலாம். ஏழை வேடனாகிய குகனிடம் இந்த ஹிருதய சம்பத்து, புதைபொருளாக இருந்தது; ராமனைக் கண்டதும் இது புதையலெடுத்த தனம்போல வெளிப்படுகிறது. குகனுடைய நட்பு வாராம்சத்தில் லட்சுமணனுடைய சகோதர வாஞ்சைக்குக் குறைந்ததில்லை; ஏன், வாழ்க்கைத் துணையாகிய சீதையின் காதலுக்கும் குறைந்ததில்லை, இது ராமனுடைய உட்கருத்து என்றும் கவிஞன் குறிப்பிடுகிறான்.



'நான் காட்டுக்குப் போய் வருகிறேன், நீ வருந்தாதே!' என்று ராமன் சடைமுடியும் மரவுரியுமாகச் சீதை முன் போய் விடை கேட்டதும், 'என்ன? ஸஹதர்மிணியாகிய

நீயும் உடன் வந்து என் கஷ்டங்களைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்று சொல்லவில்லையே! என்ன சுயநலம் இது ?' என்று சீதையின் காதலுள்ளம் துடிதுடித்ததல்லவா? அப்படித் துடிக்கிறது இந்த வேடனுள்ளமும்!

குகனுடைய ஹிருதயத்திலிருந்து பொங்கிவந்த வார்த்தையை அமுதமாய்ப் பருகிய ராமன், இதைக் 'குகன் கொள்கை' என்று குறிப்பிட்டுச் சீதையை நோக்குகிறான் ;—'தம்பி திருமுக'த்தையும் நோக்குகிறானும். ('தம்பி திருமுகம்' என்பது லட்சுமணனுடைய தியாகத்தையும் காதலையும் பளிச்சென்று எவ்வளவு வசீகரமாக நினைப்பூட்டி விடுகிறது!) அவர்களுடைய காதலுக்கு இது எவ்வகையில் குறைந்ததென்று தெரியவில்லையாம் குகன் காதல். ஆகவே, குகனைத் 'தீராக் காதலன்' என்று இதய பூர்வமாய் அங்கீகரிக்கிறான் :

கோதைவில் - குரிசில் அன்னான்
　　கூறிய கொள்கை கேட்டான்;
சீதையை நோக்கித், தம்பி
　　திருமுகம் நோக்கித், 'தீராக்
காதலன் ஆகும்!' என்று
　　கருணையின் மலர்ந்த கண்ணன்,
'யாதினும் இனிய நண்ப !
　　இருத்திஈண்(டு) எம்மொ(டு)' என்றான்.

[கோதை வில் — பூச்சூட்டி அலங்கரித்த வில்; வெற்றி மாலை சூடி விளங்கும் கோதண்டம். குரிசில் -- ஆண்களில் சிறந்தவன் ; புருஷோத்தமனான ராமன். அன்னான் - அந்தக் குகன். தீராக் காதலன் - நீங்காத காதலோடு கூடிய நண்பன். ஈண்டு - இவ்விடத்தில். இருத்தி - இருப்பாயாக ; நன்றாக இருக்கலாம்.]

நட்பு – மதம்

ராமன் சீதையை நோக்கித் தம்பி முகத்தையும் நோக்கிய இந்த நோக்கத்திற்கு யாரே விரிவுரை செய்ய வல்லார்? வாயால் சொல்ல முடியாத உணர்ச்சிகளை யெல்லாம் ஒருங்கே வெளியிடும் ஹிருதய பாஷை இது. 'தீராக் காதலன் ஆகும்' என்ற மூன்று சொற்களே புறப்படுகின்றன ராமன் வாயிலிருந்து ; மற்றப்படி ஹிருதய பூர்த்தியை வெளியிடுவது மறுபடியும் அந்தக் கண்களே! சீதையை நோக்கித் தம்பியை நோக்கிக் குகனைச் சுட்டிக் காட்டும்போது, 'கருணையின் மலர்ந்த கண்ண'னாகி விடுகிறான். ராம ஸௌந்தரியம், குகன்மீது பிறந்த கருணையால் முன்னினும் பெருகிவிட்டது போலக் காண்கிறது!

குகன் கொள்கையைக் கேட்டதும் அந்தத் 'தீராக் காதல'னை 'யாதினும் இனிய நண்ப!' என்று வாய்குளிர அழைக்கிறான். அழைத்து 'இருப்பாய்' ('இருத்தி') என்று சொன்னதுடன் 'ஈண்டு' 'எம்மொடும்' என்றெல்லாம் சொல்லித் தன் நட்புக் காதலை வெளியிடுகிறான். ராமன் குகனை உடனே தோழனாகச் சீதை லட்சுமணன் முன்னிலையில் அங்கீகாரம் செய்து விடுகிறான். நட்பு-வளர்ச்சியின் எத்தகைய உயர்ந்த படி இது பாருங்கள்! குகனது நட்புக்கொள்கையைக் 'குகன் மதம்' - 'குகஸித்தாந்தம்' என்றே சொல்லலாமல்லவா ?

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

177. பக்தர் போர்வை

யாத்திரா மார்க்கத்திலே அழகான ஓர் காட்சியைத் திடீரென்று காண நேர்ந்தால் அருகே வரும் அன்பர்களை நோக்கி, 'பாருங்கள், பாருங்கள்' என்று காட்ட விரும்புகிறோமல்லவா? அப்படி ஓர் அபூர்வமான அழகுக் காட்சி ஒன்றை ராமன் அகக் கண்ணால் காண்கிறான் அந்தக் காட்டுப் புறத்தில் குகனிடத்திலே—குகனது ஹிருதயப் பிரதேசத்திலே. அந்த முரட்டுக் கிராதனுடைய ஸ்தூல உருவத்தை ஊடுருவிப் பார்த்துச் சந்திக்கிறது உண்மையும் அன்பும் கலந்த அந்த அழகிய ஹிருதயத்தை, ராம ஹிதயம். அந்தக் களிப்பிலே மனைவியையும் தம்பியையும் நோக்கி, 'என்னைப் போல் நீங்களும் பார்த்துக் கொண்டீர்களா இந்த அதிசயத்தை?' என்று மௌனப் பிரசங்கம் செய்கிறது ராமன் கண், — ஆம், அந்தக் கண்களைச் சாளரமாகக் கொண்டு பார்க்கும் பொன்னுள்ளம்.

குகனுக்குள்ளே ஒரு கிறிஸ்து – பெருமான்!

பிறகு, ராம லட்சுமணர் சீதையுடன் நாடு துறந்து காடு புகுந்த வரலாற்றைக் குகன் அறிய விரும்புகிறான். அந்தத் துன்பக் கதையைத் தம்பி சொல்லுகிறான். (ராமன் சொன்னால் அதுதான் துன்பக் கதையாக இராதே, கைகேயி அம்மாளும் ஒரு மகோபகாரியாகக் காட்சி அளிப்பாளே!) அந்த வரலாற்றைக் குகன்

கேட்கத்தான் செய்கிறனு? இல்லை, அந்தச் சோக நாடகத்தில் வரும் தாயின் துன்பம், தந்தையின் சோகம், நகர மாந்தர் துயரம் முதலிய வற்றை யெல்லாம் குகன் ஒருவனுகவே இப்பொழுது அனுபவித்துத் தீர்க்கிறன். இந்த அனுபவத்தில் குகன்-காதல் இன்னும் ஒரு படி வளர் கிறது:

'திரு நகர் தீர்ந்த வண்ணம்
மானவ! தெரித்தி' என்ன,
பருவரல் தம்பி கூறப்,
பரிந்தவன் பையுள் எய்தி,
இருகணீர் அருவி சோரக்,
குகனும்ஆண்(டு) இருந்தான்: 'என்னே!
பெருநிலக் கிழத்தி நோற்றும்
பெற்றிலள் போலும்' என்னு.

[மானவ — மனு குலத்தைச் சேர்ந்த ராமனே. தெரித்தி — தெரி விப்பாய். பருவரல் - துயரம். பரிந்தவன் - (ராமனிடம்) பரிவுகொண் டவனுகிய குகன். பையுள் — ஹிருதயத் துன்பம். எய்தி — அடைந்து. ஆண்டு — அங்கே. பெருநிலக் கிழத்தி — பூமிதேவி. நோற்றும் — தவஞ் செய்திருந்தும். என்னு — என்று எண்ணி.]

இப்படிப் பிறர் துன்பத்தை ஒருவன் தானே அனுபவித்துப் பார்க் கும் நிலை சாமானியமன்று. கிறிஸ்து பெருமான், நம்மாழ்வார் போன்ற சிறந்த பக்த மணிகளே இந்த நிலையை அடையக்கூடும்.

பக்த சிரேஷ்டர் ஒருவரைச் சீடர்கள் ஒரு மடாலயத்திற்குள் உப சரித்துக் கொண்டிருக்கிறர்கள். வெளியே கடுங் குளிர்: அக்குளிரின் வேகம் உள்ளே இருப்பவர்களையும் பாதிக்கத்தான் செய்கிறது. சீடர்கள் குருவுக்கு ஒரு போர்வை போர்த்துச் சிறிதும் குளிர் தாக்காமல் வசதி செய்து கொடுத்திருக்கிறர்கள். குருவும் ஆத்ம ஆரோக்கியம் போல் சரீர ஆரோக்கியமும் வாய்ந்தவர்தான். எனினும் உடம்பு நடுங்குகி றது; தெருவிலே போர்வையின்றி யிருந்தால் எப்படி நடுங்குமோ, அப்படி நடுங்குகிறது! சீடர்கள் காரணம் தெரியாமல் விழிக்கிறர் கள். அப்போது ஓர் அறிவாளி — பக்த சிரேஷ்டரின் நிலையை உள்ள வாறு உணர்ந்திருந்தவன் — வெளியே போய்ப் பார்க்கிறன். தெருத் திண்ணையில் போதுமான ஆடையின்றி வாடையில் நடுங்கிக்கொண்டிருக் கும் ஒரு பிச்சைக்காரனைக் கண்டு பிடிக்கிறன். உள்ளே ஓடி வந்து, குரு மூர்த்தியின் விலையுயர்ந்த போர்வையை எடுத்துக்கொண்டு போய்ப் பிச்சைக்காரன் உடம்பைப் போர்த்துவிடுகிறன். அந்த உடம்பில் நடுக் கம் நீங்கியதும், இப்போது போர்வையால் மூடப்பெருத குருவின் உடம்பி லும் நடுக்கம் நின்று போயிற்று. இதுதான் பிறர் துன்பத்தைத் தமதாக் கிக்கொள்ளும் கிறிஸ்து நிலை, ஆழ்வார் நிலை.

இது முனிவர்களின் தவ நிலைக்கும் மேலானது. இந்நிலையை அற்புதமான பக்திக் காதலால்தான் அடையமுடியும் என்பர். இத்தகைய நிலையைக் குகன் நட்புக் காதலால் அடைந்தான் என்றல், இந் நட்புக் காதலை என்னென்பது? இத்தகைய ஒப்பற்ற நட்புக் காதலைக் 'குகன்

மதம்' அல்லது 'குக தர்மம்' என்று சொல்லும்படியாகக் கம்பன் தன் குக சித்திரத்தை உருவாக்குகிறான். எல்லாத் துன்பங்களுக்கும் மேலாக, —ராமனது தாய் தந்தையர், உற்றார் உறவினர், சிற்றரசர் பிரபுக்கள் ஆகியோரின் துயரங்களுக் கெல்லாம் சிகர சோகமாக,— 'பெருநிலக் கிழத்தி'யின் அருந்தவப் புதல்வர்களான குடிகளின் கஷ்டத்தைத் தூக்கிக் காட்டுவது, குக சித்திரத்தையே தூக்கிக் காட்டுகிறது. நாட்டுப் பொதுஜனங்களின் துயரம் நெஞ்சைத் தாக்கக் கண்ணும் கண்ணீருமா யிருக்கும் இக் காட்டு மனிதனது நிலையை என்னென்பது?

செங்கதிர்ச் செல்வம்

(சோகம் தாண்டிய கிரணஜோதி)

குகன் நிலை இப்படியிருக்க, மேற்கே சூரியன் அஸ்தமனமாகிறது. இந்நிலையில் ஒரு வீர மன்னனது மரணம் கவிஞன் நினைவிற்கு வருகிறது. உள்ள நாள் உள்ளமட்டும் தர்மத்திற்காகப் போராடினான்; தர்மத்தின் பகையாகிய அதர்ம இருளை, அறியாமை யிருளை, ஓட்டிய வண்ணமா யிருந்தான்; திசைகளை யெல்லாம் வென்று எல்லாருக்கும் மேல் நின்று ஏக சக்ராதிபதியானான்; உயர்ந்த புகழை நிலை நாட்டினான். இத்தகைய சக்ரவர்த்தியை எவ்வளவோ ராஜ பக்தியோடு மக்கள் பாராட்டினார்கள். இந்த வீரமன்னன் தர்மத்திற்காகச் செய்த இறுதிப் போரில் கொல்லப்பட்டு இரத்த மயமான போர்க் களத்தில் விழுந்து கிடக்கிறான்.

இக் காட்சியை மனசில் வைத்துக்கொண்டு இப்போது சூரியாஸ்தமனக் காட்சியைக் காண்கிறான்; நமக்குக் காட்டுகிறான் கவிஞன்:

விரியிருட் பகையை ஓட்டித்,
　　திசைகளை வென்று, மேல்நின்(று)
ஒருதனித் திகிரி உந்தி,
　　உயர்புகழ் நிறுவி, 'நாளும்
இருநிலத்(து) எவர்க்கும் உள்ளத்(து)
　　இருந்தனன்!' என்ன வீந்த
செருவலி வீரன் என்னச்
　　செங்கதிர்ச் செல்வன் சென்றான்.

[விரியிருள் — விரிவாய்ப் படர்ந்த இருள். ஒரு தனித் திகிரி — ஒப்பற்ற ஒரு சக்கரம்; இங்கே ஏக சக்ராதிபதியின் ஆக்ஞா சக்கரம். உந்தி — செலுத்தி. நிறுவி — நிலைநாட்டி. நாளும் — எந்நாளும். இருநிலத்து — இப் பெரிய உலகத்தில். என்ன — என்று சொல்லும்படி. வீந்த — இறந்துபோன. செருவலி வீரன் — போர் செய்வதில் வலிமை வாய்ந்த வீரன். செங்கதிர்ச் செல்வன் — சிவந்த கிரண ஜோதியைச் செல்வமாகவுடைய அஸ்தமன சூரியன்.]

வீர மன்னன் அதி வீரனாகித் தியாக மரணம் அடைகிறான், 'தர்மத்திற்கோ, சத்தியத்திற்கோ உயிரைக் கொடுக்கிறான் என்றால், அது மரணமே அன்று! — என்கிறான் கவிஞன். அதிவீரன், மரணத்தை வியாஜமாகக் கொண்டு மக்களுள்ளம் புகுந்து வளர்கின்றான். ஒரு காலத்தவன், இறந்த காலம் நிகழ் காலம் எதிர் காலம் என்ற முக்காலத்திற்கும் உரியவ

ஞகிறான்; ஓர் இடத்தவனாக இருந்தவன் நாடெங்கும், உலகமெங்கும் வியாபிக்கிறான்! இத்தகைய மாணம் சூரியாஸ்தமனம் போன்றது; அவ்வளவு அழகானது - சாகாத அழகு - அழகான அமரஜோதி என்பது குறிப்ப

இத்தகைய தசாத மாணத்தை மனசில் வைத்துக் கொண்டுதான் சூரியாஸ்தமன வருணனை செய்கிறான் கவிஞன் என்று ஊகிக்கலாம். அஸ்தமன சூரியனைச் 'செங்கதிர்ச் செல்வன்' என்று குறிப்பிடுவதும், இச் செல்வனுக்குத் தியாகச் செல்வனான வீர மன்னன் மறைவை ஒப்பிடுவதும் எவ்வளவு வசீகரமானவை!

குகன் வளர்ச்சி!

மாலை நேரம் வந்தது. அனுஷ்டானங்களை முறைப்படி செய்து கொண்டார்கள் சீதையும் ராமனும். (சீதையும் அனுஷ்டானங்களை ராமனைப் போல் செய்து கொண்டாள் என்று முதல் முதல் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.) படுக்கிற நேரம் வந்தது. தரையே பாயாக நாணற் புல்லை விரித்துப் படுத்துக் கொள்கிறார்கள். 'இவர்களுக்கு எவ்வித இடையூறும் நேரிடலாகாதே' என்று அதி ஜாக்கிரதையாக லட்சுமணன் வில்லும் கையுமாய் விடியுமட்டும் இமை கொட்டாமல் 'பாரா'க் கொடுத்து நிற்கிறான்.

மாலைவாய் நியமம், செய்து
    மரபுளி இயற்றி, வைகல்
வேலைவாய் அமுதன் னாளும்
    வீரனும்; விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல்
    வைகினர்; — வரிவில் ஏந்திக்
காலைவாய் அளவும் தம்பி
    இமைப்பிலன், காத்து நின்றான்.

[மாலைவாய் நியமம் - மாலையிலே செய்ய வேண்டிய அனுஷ்டானம். மரபுளி — முறைப்படி. வைகல் வேலைவாய் — படுக்கிற நேரம் வந்தபோது. அமிர்து அன்னாளும் - அமுதம் போன்ற சீதையும். வீரனும் - ராமனும். நாணல் மாலைவாய் - ஒழுங்காய் அடுக்கிய நாணல் புல்லிலே. பாரின் பாயல் - தரையாகிய படுக்கையில். வைகினன் - படுத்துக் கொண்டான். வரிவில் - கட்டு அமைந்த பலமான வில். காலைவாய் அளவும் - விடிகிற வரைக்கும். இமைப்பிலன் - இமை கொட்டாமல்.]

கண்கொட்டாமல் லட்சுமணன் காத்துக் கொண்டிருக்க, குகன் என்ன செய்கிறான்? ராமன் தரையில் கிடப்பதையும், தம்பி காவல் செய்து நிற்பதையும் பார்த்த வண்ணம் நெஞ்சழிந்து கண்ணீர் அருவியாகச் சொரிய, தொடுத்த அம்போடும் விழித்த கண்ணோடும் நின்று கொண்டிருக்கிறான். இந்நிலையில் குகன் காதல் எத்தகைய பெரு வளர்ச்சி அடைந்திருக்கிறது, பாருங்கள்!

* * * *

வேடன் தானா? வேடசரீரம் என்ற போர்வைக்குள் மறைந்திருக்கும் ஆழ்வாரைப் போன்ற ஒரு பக்திக் காதலனா?

ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

178. மூவர் காதல்

ராமனையும் சீதையையும் லட்சுமணன் காத்து நிற்க, இவனையும் சேர்த்துக் காத்து நிற்பதுபோல் குகன் நிற்கிறான்; இந்த வேடனையும் சேர்த்துக் காவல் செய்வதுபோல் சுற்றத்தார்களான வேடர்கள் சுற்றிச் சுற்றி வருகிறார்களாம் யானைக் கூட்டம் போலே. மூன்று ஜீவ அரண்கள் சீதா ராமரைச் சுற்றி; இந்த அரண்களின் நடு நாயகம் குகன்;

தும்பியின் குழாத்தில் சுற்றும்
சுற்றத்தன், தொடுத்த வில்லன்,
வெம்பிவெந்(து) அழியா நின்ற
நெஞ்சினன், விழித்த கண்ணன்,
தம்பிநின் றானை நோக்கித்,
தலைமகன் தன்மை நோக்கி,
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவிசோர் குன்றின் நின்றான்.

[தும்பி – யானை. குழாத்தில் - கூட்டம்போல். அழியா நின்ற - அழிகின்ற. தலைமகன் - தமையனும், அரசுக்கு உரிய மூத்த குமாரனு மாகிய ராமன். அம்பி - ஓடம்; படகு. சோர் - சொரியும். குன்றின் - குன்றைப் போல.]


கண்ணீர் சொரியும் குன்று

"தம்பி நின்றானை நோக்கி, தலைமகன் தன்மை நோக்கி" என் குகன். தம்பி இப்படிக் காத்து நிற்க வேண்டுமென்றால், தமையனது தன்மை தான் எப்படியிருக்க வேண்டும்! பஞ்ச சயன மெத்தையிலே படுத்துறங்க வேண்டிய மகாசுகுமாரன், — ராஜ்யஸ்ரீ குலாவி மகிழ வேண்டிய செல்வம்—இப்படி நாணற்புல் நிரப்பிய வெறுங்காட்டுத் தரை

யில் தன் மனைவியோடு அநாதைபோல் படுத்திருக்கிறானே! இப்படி அண்ணனுக்கு நேர்ந்த நிலையை நினைத்து நினைத்துக் கண் கொட்டாமல் வில்லுங் கையுமாய் இளவரசு சாதாரணக் காவற்காரன் போல் காத்து நிற்கிறானே! இப்படியெல்லாம் எண்ணமிடும் வேடனது கண்களிலிருந்து சோகம் கண்ணீராகத் தாரை தாரையாய்ப் பெருகுகின்றதாம். இப்படிக் கண்ணீர் பெருக விட்டு நிற்கும் குன்று போன்ற அந்த முரட்டுச் சரீரத்தை அப்படியே பார்த்துவிடுகிறான் கவிஞன். ('கண்ணீர் அருவிசோர் குன்றின் நின்றான்'.)

'ராமனுடைய வடி வழகும் தியாக சௌந்தரியமும் ஒரு நாள் முகத்திலே விழித்த வேடனையும் இந்தப் பாடு படுத்துகின்றனவா?' என்று அதிசயிக்கிறோம். ஆனால் குன்று போன்ற உடம்பில் குடியிருக்கும் உள்ள அன்பின் 'பொங்குமா கடல்' அல்லவா?

முதுகிலிட்ட அம்பறாத் தூணியும் நடுக்கோத்துப் பிடித்த வில்லுமாய் நடையாடத் தயாராய்க் கோட்டைச் சுவர் நின்று கொண்டிருப்பதுபோல நிற்கும் லட்சுமணனைக் காட்டிலும் குகன் அதி ஜாக்கிரதையாகக் காவல் செய்து நிற்கிறானும். இப்படி ஒரு ஜாமமா? இரண்டு ஜாமமா? ஜாமம் ஜாமமாக இரவு கழிந்து போகிறது.



சூரிய 'வேதாந்தம்'

சூரியோதயம் ஆகிறது. 'இந்த அஸ்தமன உதயங்கள் போன்றவைதாம் இறப்பும் பிறப்பும்!' என்ற வேதாந்த ஞானோதயமும் ஆகிறது கவிஞனுக்கு. 'தசரத மரணம் இன்னும் நெஞ்சிலிருந்து மறைந்து போகவில்லை! அந்தச் சோகம் கனிந்த பார்வையால் சூரியனையும் பார்க்கிறான்:—

இறக்குமா(று) இது!என் பான்போல்
முன்னைநாள் இறந்தான், பின்னாள்,
'பிறக்குமா(று) இது!'என் பான்போல்
பிறந்தனன் பிறவா வெய்யோன்!

['இறக்கும் ஆறு - இறந்து போகும் விதம். என்பான் போல்-என்று சொல்லுகிறவன் போல. முன்னை நாள் - முன்னாள். பின்னாள் - மறுநாள். வெய்யோன் - சூரியன்.]

'இறக்கும் விதம் இப்படித்தான்!' என்று அழகான சூரியாஸ்தமனம் உபதேசிக்கிறதாம், கேட்கும் செவி படைத்தவர்களுக் கெல்லாம். வாழ்க்கை உண்மையாக வாழப் பெற்றால், மரணம் பயங்கரமாக இருக்குமா? வாழ்க்கை உண்மையாகவும் அழகாகவும் உருவாகிவிட்டால், மரணமும் அழகு தான்! இப்படி மாலை மஞ்சள் வெயில் உபதேசிக்க, காலை இளம் பொற்கதிர்கள் 'பிறப்பு இப்படித்தான்!' என்று பேசுகின்றனவாம்.

பிறவாத சூரியன் இருளைக் கிழித்துக்கொண்டு பிறப்பதும், இறவாத சூரியன் ஒளிவீசிய வண்ணம் தன் ஆயிரம் கதிர்களையும் சுருக்கிக் கொண்டு இறப்பதும் ஆகிய இயற்கை-நிகழ்ச்சிகள், ஆதியில் நமது நாட்டு வேதாந்திகளுக்குப் பிறப்பிறப்புக்களும் இத்தகைய இயற்கையின் நாடகங்களே என்பதையும், ஆத்மாவும் சூரியனைப் போல் பிறவாத இறவாத, தத்துவம் என்பதையும் நினைப்பூட்டி யிருக்கலாம்.



காதல் - நாடகம் (இரண்டு)

பக்கத்து நீர்நிலைகளில் காலை இளம் பொற் சுடர்கள் விழுந்ததும், செந்தாமரை மலர்கள் மலர ஆரம்பிக்கின்றன. மறுபடியும் ஒரு வேதாந்தச் சுடர் சித்தாகாசத்திலிருந்து. இது ஒரு காதல்-வேதாந்தம்! சேற்றில் உண்டாகிற செந்தாமரைக்கும், கிழக்கே வான வீதியில் ஒளிமயமான தேரில் தோன்றும் செஞ்சுடர்ச் செல்வனுக்கும் என்ன சம்பந்தம்! அந்த மேனியை நோக்கி இந்த செந்தாமரைப் பெண்ணின் முகத்திலே என் இந்த மகிழ்ச்சி? இயற்கையின் காதல் — நாடகம்! இதற்கும், துயிலுணர்ந்தெழுந்த சீதை ராமனை நோக்கி அகமகிழ்ந்து முக மலர்வதற்கும் — ஆஹா, என்ன பொருத்தம்!

இத்தகைய இரகசியங்களை இயற்கையானது கவிஞனுக்குத் தான் வெளியிடுகிறது:

செஞ்செவே சேற்றில் தோன்றும்
    தாமரை, தேரில் தோன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி
    நோக்கின விரிந்த; வேறோர்
அஞ்சன ஞாயி றன்ன
    ஐயனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதனம் என்னும்
    தாமரை மலர்ந்த தன்றே!

[செஞ்செவே — மிகவும் சிவப்பாக. வெஞ்சுடர்ச் செல்வன் — விரும்பத் தக்க சுடர்களைச் செல்வமாக வுடைய பால சூரியன். அஞ்சன ஞாயிறு — (இங்கே) நீல சூரியன். செய்ய வஞ்சி — அழகிய பூங்கொடி போன்ற சீதை. வாழ் வதனம் — வாழ்வு பெற்ற முகம்.]

சேற்றிலிருந்து பிறந்த செந்தாமரைப்பூ, கிழக்கே பொன்மயமான தேரில் தகதக வென்று செஞ்சுடர்ச் செல்வன் தோன்றியதுகண்டு அந்த மேனியைக் காதலால் நோக்கியதும், ஒரே சிவப்பாய், ஒரே அழகாய் மலர்ந்து விடுகிறது. நீர் நிலைகளில் தாமரை இப்படி முகமலர, இனி வேறொரு சூரியனை நோக்கி வேறொரு தாமரை விரிந்து மலர்கின்றதாம்: 'பால சூரியனது பொன்னொளியிலே மிளிர்கின்றது நீல ஜோதியாகிய வேறொரு சூரியன்' என்று சொல்லும்படி விளங்குகிறதாம் ராமன் திருமேனி. இந்த வசீகர அழகை நோக்க நோக்க, பூங்கொடிபோன்ற சீதையின் முகத்தாமரையும் எவ்வளவு அழகாய் மலர்கின்றது, சுடர்கின்றது!

'எங்கே தன்னை ஊரில் விட்டுவிட்டுப் போய்விடுவானோ?' என்ற அஞ்சிய சீதைக்கு, நகர் நீங்கி வெளியே வந்ததும் உத்ஸாகந்தான். 'காட்டுக்குப் போகிறோமே!' என்ற கவலை ஒரு துளியும் கிடையாது. 'இக் காட்டுப் புறத்தில் படுத்துக்கொள்ளப் படுக்கை ஒன்றும் இல்லையே!' என்ற கவலையும் சிறிதுமில்லை. வெறுந் தரை, நாணற்புல்; ஆனால் ராமன் பக்கத்திலிருப்பதே ஆனந்தமல்லவா? நன்றாக உறக்கம் பிடித்தது; சௌக்கியமாக, சௌகரியமாக, விடிந்த பிறகுதான் துயிலெழுந்தாள். தனக்கு முன் ராமன் எழுந்து உட்கார்ந்திருந்தான் - 'நாணல் மெத்தை' மீது; காலைப் பொற் கதிர்களில் நீல ஜோதிபோல் எதிரொளி செய்த திருமேனியைப் பார்த்தாள். 'வாழ்வு பெற்றோம்!' என்று மலர்ந்து விட்டது சீதையின் அழகிய வதனம் என்னும் தாமரை.

உதயகாலத்தில் செய்யவேண்டிய நியமங்களை விரும்பிச் செய்து ராமன் புறப்படுகிறான். அப்போது முனிவர்களும் வருகிறார்கள். ராமன் குகனை நோக்கி, 'ஐயா! அப்பா! நாங்கள் கங்கையைக் கடந்து செல்லத் தோணி கொண்டுவா, விரைவில் கொண்டு வா' என்று வேண்டிக் கொள்கிறான். இக் கட்டளையைக் கேட்டதும் குகனுக்கு அழுகை வந்துவிட்டது. 'இவனுக்குக் குற்றேவல் செய்வதை விட்டு எப்படிப் பிரிந்து வாழப்போகிறோம்! என்ற ஏக்கம் உயிரையே நடுங்கச்செய்கிறது. அவனும் தனக்கு வாழ்வு ராமனுடன்தான் என்று கருதுகிறான். அந்தச் சூரிய ஒளியிலே 'நீலக்கடலோ, நீலமேகமோ, நீலமலர்ச் சோதியோ?, என்று பிரமிக்கும்படி மிளிரும் அந்த அழகைக் குகனும் சீதையைப்போல் ஆவலாய் நோக்குகிறான். இதை மூன்றாவது காதல் - நாடகம் எனலாம்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

179. இனி என்ன குறை?

'தோணி' என்றதும் 'பிரிவு' என்று பொருள் கொண்டு அழுது நடுங்கிக் கொண்டே குகன் ராமனை வணங்குகிறான். ராமனை மட்டுமா? சீதையையும் சேர்த்துத்தான். தன் சிந்தனை நிறைவேற அவள் சிபார்சு செய்ய வேண்டுமென்று கும்பிடு போடுவது போலத் தோன்றுகிறது. குகனுடைய இந்த நிலையை — இந்த அகத்தினோடு முகத்தையும் — இக் கவிதையில் கண்டு கொள்ளலாம்:

ஏவிய மொழிகேளா,
இழிபுனல் பொழிகண்ணான்,
ஆவியும் உலைகின்றான்,
அடியிணை பிரிகில்லான்,
காவியின் மலர், காயா,
கடல், மழை, அனையானைத்
தேவியொ(டு) அடிதாழாச்,
சிந்தனை உரைசெய்வான்.

[கேளா — கேட்டு. இழிபுனல் பொழிகண்ணான் — கண்களிலிருந்து நீர் விழுந்து சொரிகின்ற நிலையில் இருக்கும் குகன். அடியிணை பிரிகில்லான் — (ராமனது) திருவடிகளை விட்டுப் பிரிய மனம் இல்லாதவனாய். காவியின் மலர் — கருங்குவளைப் பூ. காயா - காயாம் பூ; ஒருவகை நீல மலர். மழை - (இங்கே) மழை பெய்யச் சித்தமாயிருக்கும் நீலமேகம். அனையானை - ஒத்தவனாகிய ராமனை. அடி தாழா - அடிகளில் வணங்கி. செய்வான் - செய்பவனானான்.]

குறைவில்லை, ஆனால்......

உயிர் உடல் எல்லாம் உலைகின்ற நிலையில் கண்ணீர் வடித்து, 'தோணி கொண்டுவரச் சொல்லுகிறானே; சரி சரி, அந்தத் தோணியை, நம் ஊருக்கே ஓட்டி ராமனை நம்முடனேயே வைத்துக் கொண்டால்

...ஆஹா!' என்றெல்லாம் கனவு-லோகத்திலே பறக்கத் தொடங்குகிறது குகனுள்ளம். ஆகவே, வேடர் வாழ்க்கையின் விசேஷங்களை, வசதிகளைச் சித்திரித்துக் காட்ட ஆசைப் படுகிறான். இதுதான் இப்போது குகன் சிந்தனை.

வேடர் வனவாசிகளானதால் நகரவாசிகளைப் போல் நாகரிக முறைகளில் பழக்கமில்லாதவர்கள். ஆகவே, 'பொய்ம் முறையிலும் பழகாத வனவாசிகள் நாங்கள்!' என்று மார்தட்டிப் பேசுகிறான் குகன்:

> பொய்ம்முறை இலரேம், எம்
> புகலிடம் வனமேயால்;
> கொய்ம்முறை உறுதாராய்!
> குறைவிலெம், வலியேமால்;
> செய்ம்முறை குற்றேவல்
> செய்குதும்; அடியோமை
> இம்முறை உறவென்ன,
> இனிதிரு நெடி(து)எம்மூர்!

[இலரேம் — இல்லாதவர் ஆவோம். புகல் இடம் - வாழும் இடம். கொய்ம் முறை உறுதாராய் - கொய்யப் பெற்று ஒழுங்காய்த் தொடுத்த மாலையை அழகாய் அணிந்திருப்பவனே; (இங்கே) ராமனே! குறைவிலெம் வலியேம் - குறைவில்லாத உடல் வலிமையை உடையோம். செய்ம்முறை — செய்ய வேண்டிய முறைப்படி. குற்றேவல் - சிறு வேலையையும். செய்குதும் — செய்வோம். அடியோமை - அடிமை செய்ய விரும்பும் எங்களை. இம்முறை உறவு — இந்த ஏவலாளர் என்ற உறவு.]



'பொய் சொல்லத் தெரியாது; அதற்கு உரிய நாகரிகம் தான் எங்களிடம் இல்லையே!' என்று சொல்லும் இந்த வனவாசி, 'ஒரு பொய்யை நிற்க வைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டிய ஞாபகசக்தியில் நாங்கள் குறைந்தவர்களாய் இருக்கலாம். ஆனால், சரீர சம்பத்தாகிய வலிமையில் ஒரு குறைவும் இல்லாதவர்கள்' என்கிறான். இந்த அபார உடல் வலிமையைக் கொண்டு ராமனுக்குப் பணி செய்து கிடக்க ஆசைப்படுகிறது காதலுள்ளம். 'எத்தகைய குற்றேவலும் செய்யத் தயார் என்கிறான். சிறு வேலையையும் 'சிறு வேலை தானே' என்று இகழாமல் 'ராமன் கட்டளை' என்று பெருமை கொடுத்துத் தொண்டாற்றுவோம் என்கிறான். 'அடியோம்' என்ற இந்த உறவு, இந்த மாட்சி

கிடைத்தால் போதும் என்கிறான். இப்படித் தங்களை 'உறவு' கொண்டு நெடுங் காலம் சுகமாக ராமன் தங்கவேண்டும்' என்று மன்றாடுகிறான்.

நன்று மன்னர் மாட்சி!

'பொய்ம் முறை இலரேம்' என்ற இந்த வனவாசியின் பேச்சுடன், அயோத்தி நகரவாசிகளில் சாமானிய மக்கள், ராமன் நகர் நீங்கியது குறித்துப் பேசியதை ஒப்பிடலாம்:

என்னே நிருபர்
இயற்கை இருந்தவா!
தன்னேர் இலாத
தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து,
முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால்,
பிழை யாதோமெய்?

'தசரத சக்ரவர்த்தி, "சக்ரவர்த்தி குமாரன்" என்று சிறப்பித்துச் சொல்லப் பெற்ற மூத்த புதல்வனுக்கு முன்னே கொடுத்த ராஜ்யத்தைத் தானே முறை திறம்பத் தம்பிக்குக் கொடுத்தார்; இளையாளுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவேண்டுமென்று ராமனுக்கு முறைப்படி கொடுத்த வாக்கைப்புறக்கணித்தாரே! இப்படிச் சத்தியத்தைக் காப்பாற்றியது நன்று, நன்று; ராஜகுலம் சத்தியம் காப்பாற்றும் முறை,



மாட்சி, எவ்வளவு அதிசயமாய் இருக்கிறது?' என்று பேசிய அந்த நகர வாசிகளின் அபிப்பிராயத்தை வனவாசியாகிய குகனுள்ளமும் ஒப்புக்கொள்வதுபோலத் தோன்றுகிறது. 'அத்தகைய "பொய்ம்முறை" "மன்னர் மாட்சி"யாக இருக்கலாம், "நகர வாசிகளின் நாகரிக"மாக இருக்கலாம்; எங்கள் இருப்பிடமாகிய வனத்தில் இல்லை!' என்பது குறிப்பு.

முனிவர்கள் 'தபோதனர்'—தவத்தையே தனமாக, ஆத்ம சம்பத்தாக உடையவர்கள் என்றால், வேடர்கள் வலிமையாகிய சரீர சம்பத்தை உடையவர்கள். முனிவர்கள் தவ ஒழுக்கத்தால் 'பொய்ம்முறை' ஒழித்தவர்கள்; வேடர்களோ பொய் சொல்லத் தெரியாதவர்கள். வேடச்சேரியின் சித்திரம் எவ்வளவு வசீகரமா யிருக்கிறது பாருங்கள்!

ராமன் தங்கினால் உணவு வேண்டாமா? நீராட, சீதைக்கு விளையாட, வசதிகள் வேண்டாமா? குகனையே கேளுங்கள்:

தேன்உள, தினை உண்டால்;
தேவரும் நுகர்தற்காம்
ஊன்உள; துணை,நாயேம்
உயிர்உள; விளையாடக்
கான்உள; புனலாடக்
கங்கையும் உளதன்றோ?
நான்உள தனையும்,நீ
இனிதிரு, நடஎம்பால்!

[தேன்உள - தேன் மிகுதியாக உண்டு. நாயேம் உயிர் உள—நாய் போன்ற எங்கள் உயிர்கள் உள்ளன. கான் — காடுகள். நான் உளதனையும் - நான் உள்ளவரைக்கும். எம்பால் - எங்கள் இடத்திற்கு.]

ராமன் 'மரக்கறி உணவுக்காரன்' என்று குகனுக்குத் தெரிந்துவிட்டது. தான் கொண்டுபோன மீனும் தேனும் சாப்பிடாததால், 'தேனும் தினையுமாவது சாப்பிடலாமே' என்கிறான். எனினும், 'ஊனுணவுதான் உடம்பிற்கு நல்லது' என்பது குகனுடைய கோட்பாடு. ஆகவே, 'தேவர்களுக்கும் நாவில் நீர் ஊறத் தக்க மாமிச வகைகள் வேட்டையினால் செழிப்பாய்க் கிடைக்கும்' என்கிறான். அவர்கள் வேட்டையாடிப் பக்குவம் செய்யும் மாமிசம் தேவாமிர்தமா யிருக்குமாம். உணவுக் கவலை, பங்கீடு, கள்ளச் சந்தை முதலான நாகரிகத் தொல்லைகளோ, இல்லவே யில்லை.

துணைக்கோ வேடர்கள் இருக்கிறார்கள்; தங்களுக்கு வேட்டை நாய்கள் உதவுவதுபோல் அவர்கள் ராமனுக்கு உதவத் தயாராய் இருக்கிறார்களாம். அங்கே வேலைகளையெல்லாம் வேடர்கள் செய்ய, விளையாட்டுக்கு எவ்வளவோ நேரம் இருக்கும் அல்லவா, சீதா ராம லட்சுமணர்களுக்கு? 'நல்லது, ஜனநெருக்கமான நகரங்களில் விளையாடும் இடங்களைத் தேடிப் பிடிப்பதுபோல சிரமப்பட வேண்டியதில்லை; விஸ்தாரமான காடுகள் கிடக்கின்றன, வேடர் சேரிகளை ஒட்டி — "வா, வா" என்று விளையாட அழைப்பதுபோலே!' என்கிறான்.

ராமன் முதலானோர் நீராடுவதில் விசேஷ விருப்பமுள்ளவர்கள் என்பதையும் குகன் தெரிந்துகொண்டான். 'பொய்ம்முறை நாகரிகத்தைப் போல் நீராடும் நாகரிகமும் குகனுக்குப் பிடிக்காது. எனினும், இது ராமனுக்குப் பிடித்தமா யிருப்பதால், 'அதற்குத்தான் கங்கையாறு கரைபுரண்டு போகிறதே' என்கிறான். 'இத்தனை வசதிகளும் நானும் இருக்கும்போது உனக்கும் உண்டோ குறை?' என்கிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

180. ராமனுக்கும் ஒரு புது வாழ்வு

உணவு முதலான வசதிகளைக் குறிப்பிட்ட பின், ராமனுடைய நாகரிகத்தில் உடைக்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு என்பது குகனுக்கு நினைவு வருகிறது. நகர வாசிகளுக்கு உடுத்தப் பட்டாடை வேண்டுமே: படுக்கத்தூங்கு மஞ்சம் வேண்டுமே! ஆம், அழகாய்ச் சங்கிலி கட்டித் தொங்கவிட்ட தூங்குமஞ்சம் இல்லாமல் அரசிளங் குமாரர்களுக்கு எப்படித் தூக்கம் வரும்? சொகுசாய்த் தங்குவதற்கு மாளிகை வேண்டுமே; ஓடித் திரிய வாகனம் வேண்டுமே; அணிந்து மகிழ ஆபரணம் வேண்டுமே. வயிற்றுப் பசி தீர்ந்தாலும் வாய்க்குச் சுவை தரும் தின்பண்டங்களைத் தின்றுகொண்டே யிருப்பார்களே! இத்தனை "அனுவசிய"மான தேவைகளுக்கும் வேடச் சேரியில் போவதெங்கே? தேவையைப் பெருக்கும் நாகரிகம்தான் வேடர்களுக்குத் தேவையில்லையே?

செங்கல் - சுண்ணாம்பு நாகரிகம் ஏன் ?

வேடர்கோன் மூளை துரிதமாக வேலை செய்கிறது. கட்டியிருக்கிறார்களே, மாவுரி — காடு முரடான மரவுரி! பட்டாடையைவிட்டு இப்படிப் பழகிக் கொண்டவர்களுக்கு, இனி அடுத்தபடியாகத் தோலாடை கட்டிக் கொள்வதில்தான் என்ன கஷ்டம் இருக்க முடியும்? இன்னும் தோலைக் கொஞ்சம் தேய்த்துப் பதனிட்டுக் கொடுத்தால் "நம்மூர்ப் பட்டாடை" ஆகிவிடாதா?

இப்படி எண்ண அலைகள் மோதியடிக்க, 'கண்டேன், கண்டு பிடித்து விட்டேன் வசதிகளுக்கெல்லாம் வழி!' என்கிறான் குதூகலமாக :

தோல்உள துகில் போலும் ;
சுவைஉள ; தொடர்மஞ்சம்
போல்உள பரண் ; வைகப்
புரைஉள ; கடிதோடும்
கால்உள ; சிலைபூணும்
கைஉள : கலிவானின்
மேல்உள பொருளேனும்
விரைவொடு கொணர்வேமால் !

[துகில் - பட்டாடை. சுவை - (இங்கே) சுவையுள்ள தின்பண்டங்கள். தொடர் மஞ்சம் — (சங்கிலியால்) கட்டித் தொங்கவிட்ட தூங்கு மஞ்சம். வைக — தங்க. புரை — புல்லுப் புரை என்ற சிறு குடிசைகள். கடிது — விரைவாக. சிலை — வில். கலிவான் — ஓசையை யுடைய வானம்.]

தோலாடை கட்டிப் பழகிவிட்டால், வேடர்களின் வேறு பழக்கங்களிலும் பயிற்சி பெறலாம். மரங்களில் பரண் கட்டித் தூங்குவார்களே வேடர்கள், காட்டு மிருகங்களின் உபத்திரவங்களுக்காக, - அந்தப் பரண்களையே தூங்கு மஞ்சமாகக் கொண்டு உறங்கவும் கற்றுக் கொள்ளலாமல்லவா? பகல் - வெய்யிலுக்கோ புல்லுப் புரைபோல் செங்கல் - சுண்ணாம்பு நாகரிகம்தான் இனிமையாகுமா, வசதியாகுமா? சிமிட்டிச் சுண்ணாம்பு நாகரிகம்தான் வேண்டுமா?

வாகனம் எதற்கு? 'தொண்டிகளா நாம்? கடிதோடும் கால்கள் இருக்கின்றனவே!' என்கிறான். ஆபரணங்களில் குகனுக்கும் ஆசைதான். அந்தப் பைத்தியம உற்பத்தியானதே அவ்விடத்தில்தானே? ஆனால் அந்தச் சேரி நகைகள் இவர்களுக்குப் பிடிக்குமா? இருக்கட்டும், கைக்குப் பூண் வில்தானே? இத்தகைய கால்களும் கைகளும் எந்தப் பொருளையும் கொண்டுவந்து சேர்த்துவிடுமே — வானத்திலுள்ள பொருளையும்கூட! வசீகரமான வாழ்க்கைச் சித்திரம் — இல்லையா?

தங்கிப் பார்க்கலாமே !

கடைசியாக, குகன் ராமனை நோக்கி 'நம்முடைய குடிசையில் ஒரு நாளாவது தங்கித்தான் போகவேண்டும்' என்று பிரார்த்திக்கிறான். நெடுங்காலம் எங்கள் ஊரில் தங்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டான் முதன் முதல். பதினாலு ஆண்டு வனவாச காலம் கழிந்த பின்பும் ராமனை இராஜ்யத்திற்கு விடாமல் வேடர்களின் முடிசூடா மன்னனாக வைத்துக்கொள்ள விரும்பியதுபோல், — தன் காலத்திற்குப் பின்பும் ராமன் அப்படியே அந்த வாழ்வில் இருந்துவிடலாமென்று கருதியவன்போல் — பேசிவிட்டான். 'இதற்கெல்லாம ராமன் இணங்கவா போகிறான்? என்ன பைத்தியம்!' என்று தன் ஆசை - வெள்ளத்திற்கு ஓர் அணைபோட்டுக் கொண்டவனைப்போல், 'நான் உள்ளவரைக்கும் நீ ஒரு கவலையுமில்லாமல் — சிறிய தாயையும் அந்தப் 'பொய்ம்மறை'யையும் மறந்து — எங்களிடம்தானே தங்கிவிடலாம்' என்று பேசினான் — தன் முதல் தீர்மானத்திற்குத் தானே ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்ததுபோல். வேடர் வாழ்க்கையின் வசதிகளையெல்லாம் தெரிந்து கொண்ட பின்பும் ராமன் உத்ஸாகமாய்ச் "சரி" சொல்லாததால், 'ஒரு நாளாவது தங்கிப் பார்க்கலாமே!!' என்கிறான்.

'எங்கள் குடிசையில் நீ பல நாள் தங்க விரும்பாவிடினும், ஒரு நாளாவது விருந்தாளியாக இருக்கவேண்டும். ஒரு நாள் நீ தங்கினாலும், நாங்கள் உய்வு பெறுவோம், ஈடேறி விடுவோம்!' என்கிறான் :

> 'உய்குதும் அடியேம், எம்
> குடிலிடை ஒருநாள் நீ
> வைகுதி எனின், மேல் ஓர்
> வாழ்வில்லை பிறி(து)!' என்றான்.

[உய்குதும் - உய்ந்து போவோம்; உய்வு பெறுவோம். அடியேம் - பணிசெய்ய விரும்பும் நாங்கள். குடிலிடை — குடிசையில். வைகுதி எனின் — தங்கினாய் என்றால். பிறிது - வேறான.]

இராமன் தங்கள் குடிசையில் ஒரு நாள் தங்கினாலும் வேடர்கள் அதைத் தங்களுக்குப் பெரும் பாக்கியமாக மதித்து மகிழ்ந்து போவார்களாம். ராமன் தங்களுடன் தங்குகின்ற அந்த ஒரு நாள் - வாழ்வைக் காட்டிலும் மேலானதொரு வாழ்வு தங்களுக்கு வேறில்லை என்று கூறி முடிக்கிறான் குகன்.

ஆம், இது வேடர்களுக்கு ஒரு புது வாழ்வு; ராமனுக்கும் ஒரு புது வாழ்வு தானே? குகனுடைய இத்தகைய நட்பு - வளர்ச்சி குகனையும் உயர்த்திவிடுகிறது; இந்த நட்புப் பெருமையில் தானும் உயர்ந்து விட்டதாக உணர்கிறான் ராமன்!

ராமன் சிரிப்பு

அகத்திலே அருள், முகத்திலே இளநகை, அகத்திலே பொங்கி நிறைந்த அருளே அலைவீசி வெளிப்படுவது போல். இளநகை வெண்ணிற நகையாகிறது, ஆம், வெண்ணிறப் பற்கள் தோன்ற ராமன் சிரிக்கிறான் குகனது வேண்டுகோளைச் செவி யேற்றதும், — அந்த வேண்டுகோள் வாயிலாக அம் முரட்டுச் சரீரத்திற்குள் தங்கிய அன்பு மயமான இதயத்தைக் கண்டதும்.



'சில நாட்களில் திரும்பி விடுகிறோம், தாமதம்செய்வோமா?' என்று, நகை செய்து ஆறுதல் சொல்லுகிறான். இந்த அருள் பொங்கிய வெண்ணகையில் எவ்வளவு பொருள் தங்கியிருக்கிறது! இந்தப் பொருளின் ஒரு சிறு பகுதிதான் சொற்களில் வெளிப்படுகிறது :

அண்ணலும் அதுகேளா,
அகம்நிறை அருள்மிக்கான்,
வெண்ணிற நகைசெய்தான்,
'வீர! நின் உழை,யாம் அப்
புண்ணிய நதியாடிப்,
புனிதரை வழிபாடுற்(று),
எண்ணிய சிலநாளில்
குறுகுதும் இனி(து)'என்றான்!

[அண்ணலும் - (நட்புப்) பெருமையில் சிறந்த ராமனும். கேளா — கேட்டு. அகம் நிறை அருள் மிக்கான் - அகம் நிறைந்த அருள் மிகுதியாகப் பொங்கி வெளிப்படப் பெற்றவனாய். வெண்ணிற நகை செய்தான் - பல்லெல்லாம் தெரியும்படியாக, பற்களின் வெண்ணிறம் வெளித் தோன்றும்படியாகச் சிரித்தான். நின் உழை - உன்னிடத்திற்கு. புனிதரை - புனித வாழ்வு வாழும் முனிவர்களை. வழிபாடு உற்று - வழிபட்டு; பணிவிடை செய்து. எண்ணிய — விரல் வைத்து எண்ணக் கூடிய. குறுகுதும்- வந்து சேர்வோம்.]

பதினாலு ஆண்டுகள் கழித்து வருவோம் என்றால், இத்தகைய நண்பன் ஏங்கிப் போவானல்லவா? எனவே 'எண்ணிய சில நாளில் வந்து சேருவோம்!' என்கிறான். இந்த வாக்கிலே, — இந்த நகைப்பிலே — குகனது பேரன்பை நோக்கிய திகைப்பு, ஆனந்தம், வியப்பு, அனுதாபம்; அறியாமையையும் கள்ளங் கவடற்ற உள்ளத்தையும் நோக்கிய பரிதாபம், சோகம் - இப்படி எத்தனையோ உணர்ச்சிகள் கலந்து நெருங்கி நிறைந்து பொங்குகின்றன!

'ஏமக சஞ்சாரமுள்ள மலைக்காட்டைப் பார்த்து வருகிறேன்!' என்று சொல்லிக் கோசலையிடம் ராமன் வனவாசத்திற்கு விடைபெற்றுக்கொள்ள முயன்றதை இந்த சந்தர்ப்பத்தில் நினைப்பூட்டிக் கொள்ள வேண்டும்.

'புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபட்டு இனிது வந்து சேர்வோம்!' என்று ராமன் குகனை நோக்கிக் கூறுகிறான். இது, ராமன் தன் தாயாரிடம் விடை பெற்றுக் கொள்ளும்போது, 'மாட்சிமை (உள்ளபடி) தங்கிய முனிவர்களுடன் தங்கி வரவேண்டுமென்று தந்தையாகிய சக்கரவர்த்தி என்னை ஏவியதுண்டு' என்று சொன்னதை நினைப்பூட்டுகிறது. கைகேயி ராமனை நோக்கி, 'நீ போய்த் தவம் மேற்கொண்டு புண்ணியத் துறைகளில் நீராடி வரவேண்டும் என்பது சக்ரவர்த்தியின் கட்டளை' என்று சொன்னதையும் இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

குகன் விரைவாகப் போய் ஒரு நீண்ட தோணி கொண்டு வருகிறான். ராமன் சீதையோடும் தம்பியோடும் அந்த ஓடத்தில் ஏறிக் கொள்ளுகிறான். முனிவர்களை நோக்கி, 'எங்களுக்கு விடையளிப்பீராக' என்று வேண்டிக்கொண்டு, குகனை நோக்கி, 'ஓடம் விடு விரைவாக!' என்று நட்புரிமை தோன்றத் துரிதப்படுத்துகிறான்.

ராமன் ஆணைக் கட்டளையிட்டதுதான் தாமசம், அலைகள் மடங்கி விழும்படி அவற்றைக் கிழித்துக் கொண்டு ஓடம் முடுகி ஓடும் அழகைப் பார்க்கிறார்கள் கரையிலுள்ள முனிவர்கள். பார்த்து என்ன பாடுபடுகிறார்கள்!